Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை ரூபா: 5-00

நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மாசி 12 | [24 - 02 - 1998] | செவ்வாய்க்கிழமை | ஓசை 05

## சித்திபெற்ற மாணவருக்கு பாராட்டும் பரிசளிப்பும்

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான கோட்டமட்ட பாராட்டு விழாக்களை நடாத்துவதற்கு தமிழீழ கல்விமேம்பாட்டுப் பேரவையினரும் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பும் ஒழுங்கு செய்துள்ளனர். தேர்ச்சிபெற்ற அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. இப்பாராட்டு விழாக்கள் மருதனாமடக் கோட்டத்தில் இன்று (6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை வெற்றி கொள்ளும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும்

## றமில்டன்வனசிங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளை வெற்றிகொள்ளும்வரை வடக்கு, கிழக்கில் யுத்தம் தொடரும் என கூட்டுப்படை தலைமை தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா 'திவயின' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் விடுவிக்கப்படும்வரை படையினர் நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்வர் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; நாடு முழுவதிலும் இடம்பெற்றுவந்த யுத்தம் இன்று வடக்கு கிழக்கில் மட்டுமே நடைபெறுகிறது வடக்கு - கிழக்கிலும் இராணுவம் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகிறது என்றார்.

இதேவேளை வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை தற்போது இடம்பெறாத போதிலும் படிப்படியான நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுவருவதாக மந்திரிசபை பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## மீட்புநிதி சேகரிப்பு நேர அட்டவணை

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நிதி சேகரிப்பு இன்று நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 2-30 மணி தொடக்கம் 4 30 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் இடம்பெற உள்ளது.

மேலும் நாளை யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 2-30 மணி தொடக்கம் 4-30 மணிவரை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற உள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ வெற்றிபரன் அறிவித்துள்ளார்

## ஹெலி நோட்டம்

(சுன்னாகம்)

வலிவடக்கில், மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டிப் பகுதிகளிலும், வலிவடக்கில் இருந்து காரைநகர் வரையான இராணுவ நிலைகளை அண்டிய பிரதேசங்களிலும் நேற்று பல தடவைகள் உலங்குவானூர்தி நோட்டம் விட்டுச் சென்றது.

மேலும் கடந்த சனியன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயச் சூழலில் சிறாக எறிகணைகள் மூன்று வீழ்ந்து வெடித்ததாயினும் பெரியளவிலான சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்பதை நேரில் அவதானிக்க முடிந்தது. [11], [09]

## திருமலையில் மோதல்

திருக்கோணமலை மாவட்டம் குச்சவெளியில் நேற்று விடுதலைப் புலிகளிற்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## யாழ். செயலகம் முன் நேற்று மறியல் போர்

### அரச அதிபருக்கு மகஜர் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் யாழ். குடாநாட்டு மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையைக் கண்டித்தும் இதனால் ஏற்பட்டுள்ள உணவு, மருந்துப் பொருள் தட்டுப்பாடு, பசி, பஞ்சம், வேலையின்மை மற்றும் பொருளாதாரச் சீரழிவுகள் போன்றவற்றைக் கண்டித்தும் அவற்றைச் சீர் செய்யக்கோரியும் மறியல் போராட்டமொன்று நேற்று காலை 9 மணியளவில் யாழ் செயலகம் மற்றும் யாழ். பிரதேச செயலக முன்றலில் நடாத்தப்பட்டது.

யாழ். உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட மக்கள் மற்றும் தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட பெருந்திரளான மக்கள் இம் மறியல்போராட்டத்தில் கலந்துகொண்டு யாழ். செயலக நாளாந்த அலுவல்களை நடைபெறவிடாமல் மறியல் போராட்டத்தினை நடாத்தினர்.

இப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் "தமிழ் மக்களை பட்டினிபோட்டு கப்பலொருசாட்டா" "துன்பத்தை நீக்க புறப்பட்டது புத்தமதம் ஆனால் துன்பப்படவைப்பது பிரேமதாசாவின் புத்தமதம்" "கதிர்காமத்திற்கு ரயில் பாதை இங்கு கதியற்றவர் வாழ்வில் பட்டினிப்பாதை" "சிறிலங்கா அரசே பொருளாதாரத்தடையை நீக்கு பட்டினியை போக்கு" "புத்த விகாரைகள் தங்கக்கவசம் பெறுகின்றன ஆனால் தமிழ் வயிறுகள் குண்டுகளை ஏற்கின்றன" சிறிலங்கா அரசே பாதையை திறந்துவிடு பட்டினியை நீக்க எமக்கு வழி தெரியும்" என கோஷமிட்டனர்.

தொடர்ந்து சுமார் ஐந்து மணித்தியாலங்கள் நடை [6 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலி படுகொலை விசாரணை அரசு தொடர்ந்து மௌனம்

(கொழும்பு)

கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய படுகொலைகள் குறித்து விசாரணை செய்யும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோள் குறித்து அரசு தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகின்றது

மேற்படி கடலில் பல பொது மக்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டது குறித்து அரச சார்பற்ற புலன் விசாரணை ஒன்றை மேற் வேண்டுகோள் விடுத்தது. இவ் வேண்டுகோளுக்கு அரசு இது வரை பதில் எதுவும் வழங்கவில்லை இவ்விடயம் தொடர்பாக அரசு மௌனம் சாதித்து வருகிறது.

## தமிழர்களின் துயர்கள் விரைவில் அகன்றுவிடும்

- தொண்டமான்

(கொழும்பு)

தமிழ் மக்களின் துன்பங்களும் துயரங்களும் விரைவில் ... தலைவருமான எஸ்.தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொழும்பிலிருந்து ...

## ஊர்வலமாக வந்த மக்கள்

ன் ஆலயச் சூழலில் சிறாக எறிகணைகள் மூன்று வீழ்ந்து வெடித்ததாயினும் பெரியளவிலான சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்பதை நேரில் அவதானிக்க முடிந்தது. [11], [09]

## மீட்புநிதி சேகரிப்பு நேர அட்டவணை

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நிதி சேகரிப்பு இன்று நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 2-30 மணி தொடக்கம் 4-30 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் இடம்பெற உள்ளது.

மேலும் நாளை யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 2-30 மணி தொடக்கம் 4-30 மணிவரை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற உள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ வெற்றி யரன் அறிவித்துள்ளார்.

## ஹமில்டன்வனசிங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளை வெற்றிகொள்ளும்வரை வடக்கு, கிழக்கில் யுத்தம் தொடரும் என கூட்டுப்படை தலைமை தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா 'திவயின' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் விடுவிக்கப்படும்வரை படையினர் நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்வர் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; நாடு முழுவதிலும் இடம்பெற்றுவந்த யுத்தம் இன்று வடக்கு கிழக்கில் மட்டுமே நடைபெறுகிறது வடக்கு - கிழக்கிலும் இராணுவம் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகிறது என்றார்.

இதேவேளை வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை தற்போது இடம்பெறாத போதிலும் படிப்படியான நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுவருவதாக மந்திரிசபை பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## திருமலையில் மோதல்

திருக்கோணமலை மாவட்டம் குச்சவெளியில் நேற்று விடுதலைப் புலிகளிற்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## யாழ். செயலகம் முன் நேற்று மறியல் போர்

### அரச அதிபருக்கு மகஜர் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் யாழ். குடாநாட்டு மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையைக் கண்டித்தும் அதனால் ஏற்பட்டுள்ள உணவு, மருந்துப் பொருள் தட்டுப்பாடு, பசி, பஞ்சம், வேலையின்மை மற்றும் பொருளாதாரச் சீரழிவுகள் போன்றவற்றைக் கண்டித்தும் அவற்றைச் சீர் செய்யக்கோரியும் மறியல் போராட்டமொன்று நேற்று காலை 9 மணியளவில் யாழ் செயலகம் மற்றும் யாழ். பிரதேச செயலக முன்றலில் நடாத்தப்பட்டது.

யாழ். உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட மக்கள் மற்றும் தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட பெருந்திரளான மக்கள் இம் மறியல்போராட்டத்தில் கலந்துகொண்டு யாழ். செயலக நாளாந்த அலுவல்களை நடைபெறவிடாமல் மறியல் போராட்டத்தினை நடாத்தினர்.

இப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் "தமிழ் மக்களை பட்டினிபோட்டு கப்பலொருசாட்டா" "இன்பத்தை நீக்க புறப்பட்டது புத்ததம் ஆனால் துன்பப்படவைப்பது பிரேமதாசாவின் புத்தமதம்" "கதிர்காமத்திற்கு ரயில் பாதை இங்கு கதியற்றவர் வாழ்வில் பட்டினிப்பாதை" "சிறிலங்கா அரசே பொருளாதாரத்தடையை நீக்கு பட்டினியை போக்கு" "புத்த விகாரைகள் தங்கக்கவசம் பெறுகின்றன ஆனால் தமிழ் வயிறுகள் குண்டுகளை ஏற்கின்றன" "சிறிலங்கா அரசே பாதையை திறந்துவிடு பட்டினியை நீக்க எமக்கு வழி தெரியும்" என கோஷமிட்டனர்.

தொடர்ந்து சுமார் ஐந்து மணித்தியாலங்கள் நடை

[6ஆம் பக்கம் பார்க்க]

## இளாலி படுகொலை விசாரணை அரசு தொடர்ந்து மௌனம்

(கொழும்பு)

இளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய படுகொலைகள் குறித்து விசாரணை செய்யும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோள் குறித்து அரசு தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகின்றது

மேற்படி கடலில் பல பொது மக்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டது குறித்து அரச சார்பற்ற புலன் விசாரணை ஒன்றை மேற்கொள்ளவேண்டுமென்று இலங்கையின் மனித உரிமைகள் இயக்கம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. இவ் வேண்டுகோளுக்கு அரசு இதுவரை பதில் எதுவும் வழங்கவில்லை இவ்விடயம் தொடர்பாக அரசு மௌனம் சாதித்து வருகிறது.

## தமிழர்களின் துயர்கள் விரைவில் அகன்றுவிடும்

- தொண்டமான்

(கொழும்பு)

தமிழ் மக்களின் துன்பங்களும் துயரங்களும் விரைவில் அகலும் என கிராமிய அபிவிருத்தி மற்றும் கற்றுலாத்துறை அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## ஊர்வலமாக வந்த மக்கள் செயலகம் முன் மறியல்

### கரவெட்டியில் செயலகம் செயலிழப்பு

(வடமராட்சி)

வடமராட்சி மேற்கு-தெற்கு (கரவெட்டி) பிரதேச செயலர் பணிமனையை நோக்கி அல்வாயில் இருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்ட பேரணி பணிமனை முன் மறியல் போராட்டத்தை நடாத்தியது பொருளாதாரத் தடை உச்சக்கட்டத்தை யடைந்ததையிட்டு வாடிய மக்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்தனர். நேற்றுக் காலை 7-30 மணியளவில் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய வருதியில் இருந்து ஆரம்பித்த பேரணி ஒரு மைல் தூரம் நடந்து சென்று 8 30 மணிக்கு மாலிச்சந்தியில் உள்ள பிரதேச செயலர் பணிமனையையடைந்து, மறியல் போராட்டத்தை ஆரம்பித்தது. இதன் காரணமாக பிரதேச செயலகம் நேற்று இயங்க முடியவில்லை.

தற்போது தமிழீழ மக்கள் மீது சிறிலங்கா அரசு ஏற்படுத்திய பொருளாதாரத்தடை மற்றும் பலவகையான தடைகளை கண்டித்துஇத்தடைகளை நீக்கக் கோரியே இப் பேரணி ஊர்வலமும், மறியல் போராட்டமும் நடைபெற்றது.

இப்பேரணியின்போது சிறுவர்கள், முதியோர்கள், பெண்கள், ஆண்கள் உட்பட பலர் கலந்து கொண்டதோடு சனசமூக நிலையங்களும் இணைந்திருந்தன. இதன்போது சிறிலங்கா அரசுக்கெதிரான பல சுலோகங்கள் கொண்ட அட்

[6ஆம் பக்கம் பார்க்க]

## பச்சிலைப் பள்ளியில் மக்கள் பேரணி

(பச்சிலைப் பள்ளி)

பச்சிலைப்பள்ளியிலுள்ள பொதுநிறுவனங்களும் பொதுமக்களும் மாணவர்களும் ஒன்றிணைந்து சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, மக்கள் மீதான இராணுவ நடவடிக்கை என்பவற்றைக் கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடாத்தினர்,

காலை 10 30 மணியளவில் புலோப்பளைச் சந்தியிலிருந்து ஆரம்பித்த இப்பேரணியில் சிறிலங்கா அரசைக் கண்டிக்கும் பதாகைகளை மக்கள் தாங்கிச் சென்றதுடன் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிரான கோஷங்களையும் எழுப்பினர்.

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் செயலகத்தை

[6ஆம் பக்கம் பார்க்க]

### ஐரோப்பிய நாடுகளுக்கு

## அகதிகளாக வருவோருக்கு புகலிடம்வழங்கக் கோரிக்கை

[பேர்லின்]

அரசியல் காரணங்களுக்காகவும், உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் தமது நாட்டைவிட்டு தப்பிவரும் அகதிகளுக்கு ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் வழங்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய இனவெறி எதிர்ப்பு அமைப்புக்களின் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு நாட்களாக பேர்லினில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 50 இற்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மேற்படி ஐரோப்பிய நாடுகளில் அரசியல் புகலிடம் கோருபவர்களுக்கு ஏற்ப சட்டதிட்டங்களில் விலக்களிக்கப்பட வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் மேலும் கோரப்பட்டது.

இனவெறியை எதிர்த்துப் போராட ஒருங்கிணைந்த முயற்சிகள் வேண்டும் என்றும் பிறநாடுகளில் இருந்து குடி பெயரக்கூடியவர்களுக்கு அதிகளவு உரிமைகள் பெற்றுத்தர வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் கோரப்பட்டது.

உளவாளிகள் !!!
அவதானமாக இருக்கவும்...!
காவியம் படைத்திட காப்போம் இரகசியம்

## வரி விளம்பரம்

### சலனம்

சென்னை ஃபிலிம் சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை இருமாத இதழாக வெளிவருகின்றது. விபரங்கட்கு, வசந்தம் புத்தக நிலையம். 405. அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (4063)

### எம். ஜி. ஆர். திருமண சேவை

அரச தொழிலை எதிர்பாராது சாதகம் தந்தவர்கள் உடன்தொடர்பு கொள்ளவும். வே. புண்ணியமூர்த்தி அனுமதி இலக்கம் 2518 புத்தூர் சந்தி, மீசாலை. (3380)

### குழாய்க் கிணறுகள்

குறித்தநேரத்திற்குகுழாய்க் கிணறுகள் தேர்ந்த சிகைவால் செய்து கொடுக்கப்படும் தொடர்புகளுக்கு கு. சுதேந்திரராஜ் வீரபத்திரர் கோவிலடி பழைய றோட், கோப்பாய், கு. சுதேந்திராஜ் மூத்த விநயகர் வீதி, இல. 09 கச்சேரி நல்லூர் (4321

### துளிர்

தமிழ் நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ், மற்றும் சலனம், கணையாழி, முன்றில், ஆகவே, காலம், நந்தனா போன்ற தரமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் விற்பனையாகின்றன விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனாவீதி, யாழ்ப்பாணம். [4061]

### சைக்கிள் மாறிவிட்டது

15-02 93இல் இலங்கை வங்கிக்கு முன்பாக எனது சைக்கிள் மாறி எடுக்கப்பட்டு விட்டது தயவுசெய்து சைக்கிளை மாறி எடுத்தவர் எனது சைக்கிளை ஒப்படைத்து தனது சைக்கிளைப் பெற்றுக்கொள்ளும்படி இத்தால் வேண்டுகிறேன். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: க. பாலசுப்பிரமணியம், இல. 452. மொடேர்ன் கபே, ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம். (சி 6070)

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்...

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடுவப்பணியகத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு கலந்துரையாடல் ஒன்றுநடை பெறவுள்ளது. இக் கருத்தரங்கில் க. பொ. த. உயர்தர, சாதாரணதர பிரத்தியேக வகுப்புகளில் கலந்து கொள்ளவுள்ள வெளிமாவட்டத்தைச் சேர்ந்த சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## இடம்பெயர்ந்த மாணவ - மாணவிகளுக்கு அப்பியாசப் புத்தகங்கள் சீருடைகள் அன்பளிப்பு

(குருநகர்)

யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தால் இடம் பெயர்ந்துள்ள ஆயிரக் கணக்கான மாணவ-மாணவிகளுக்கு அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

தாளையடி பங்குத்தந்தையூடாக 2 32? அப்பியாசப் புத்தகங்கள் 760 மாணவிகள் சீருடை 584 மணவர் சீருடை ஆகியனவும்

நவாலி பங்குத்தந்தை மூலம் 1161 அப்பியாசப் புத்தகங்கள் 65 மாணவிகள் சீருடை 49 மாணவர் சீருடை என்பனவும்-

பாஷையூர் பங்குத்தந்தையூடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் 231 மாணவிகள் சீருடை 182 மாணவர் சீருடைகளும்-

யாழ்- புவானியார் ஆலயப் பங்கின் ஊடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் 27 மாணவிகளதும் 42 மாணவர்களது சீருடைகளும்-

சுன்னாகம் பங்குத் தந்தை ஊடாக 1161 அப்பியாசப் புத்தகங்களையும், அச்சுவேலி பங்குத் தந்தைமூலம் 1161 அப்பியாசப் புத்தகங்கள், 137 மாணவிகளின் சீருடை 144 மாணவர்கள் சீருடை ஆகியனவும்-

உரும்பராய் பங்குத் தந்தை ஊடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் 55 மாணவிகள், 80 மாணவர்கள் சீருடைகளையும்-

யாழ் மேரலயப் பங்கினூடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் 27 மாணவிகள் 10 மாணவர் சீருடைகளையும்-

மானிப்பாய் பங்குத் தந்தை மூலம் 2,322 அப்பியாசப் புத்தகங்கள் 71 மாணவிகள். 90 மாணவர் சீருடை என்பனவும்-

முகமாலை பங்குத் தந்தை ஊடாக 1161 அப்பியாசப் புத்தகங்களையும், சாவகச்சேரி பங்கினூடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் 194 மாணவிகள் 87 மாணவர்கள் சீருடைகளையும்-

அரியாலை பங்குத் தந்தை மூலம் 1161 அப்பியாசப் புத்தகங்களையும் மிருசுவில் பங்குத் தந்தையூடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் 19 மாணவிகள் 25 மாணவர் சீருடைகளையும்-

சரவெட்டி பங்குத் தந்தை மூலம் 1161 அப்பியாசப் புத்தகங்கள் 325 மாணவிகள், 225 மாணவர் சீருடை என்பனவும்-

பருத்தித்துறை பங்குத் தந்தையூடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் 55 மாணவிகள் 47 மாணவர்கள் சீருடை ஆகியனவும்-

யாழ் அடைக்கல நாயகி பங்குமூலம் 1161 அப்பியாசப் புத்தகங்கள் 43 மாணவிகள், 64 மாணவர் சீருடைகளும் -

குருநகர் பங்குத்தந்தை மூலமாக 1161 அப்பியாசக்கொப்பிகள், 20 மாணவிகள் 15 மாணவர் சீருடைகளையும்-

சில்லாலை பங்குத்தந்தை மூலமாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் 230 மாணவிகள் 200 மாணவர்

## மரநடுகை பற்றி கலந்துரையாடல்

(வடமராட்சி)

வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் பாடசாலை மாணவர்களுக்கான மரநடுகைத் திட்ட மாவட்டக் குழுவுடன் வடமராட்சிக் கோட்டக் கொத்தணி குழுக்களின் கலந்துரையாடல் நேற்று வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் போது மரநடுகையின் கோட்டமட்டத்திலான பிரச்சினைகள் அடுத்தகட்ட நடவடிக்கைகள்; மாணவர்களுக்குச் சேமிப்புப் புத்தகங்கள் வழங்கல் பற்றி ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்கள், கொத்தணி அதிபர்கள், கொத்தணி கோட்ட மட்டத்திலான உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

[பே]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்

4-12-1980



ஆண்டவன் அடியில்

24-01-1993

### கனகரட்ணம் - ஜெகருபி (ஆத்தை)

அன்ன நடையழகும் அம்மா - உன்
அசைந்தாடும் பொன்னுடலும்
வண்ண மதி முகமும் - உன்
வட்டப் பொட்டழகும்
மழலைச் சொல்லழகும்
மலர்கள் பறிக்கும் - உன்
கையழகும்
விநாயகர் விநாயகம்மா - நீ
விநாயகனை நினைக்கும் திறனும்
மாமா, மாமியுடன் மகிழ்ந்திருந்த - உன்
மகிழ்வு நிலையும் மறைந்தது ஏனம்மா!
அப்பா, அம்மா, அக்கா, அண்ணா - என
அழைத்திடும் வார்த்தை யெல்லாம்
அனலிலே பட்ட மெழுகுபோலானதம்மா!
தோளிலே புத்தகப் பையும் - உன்
துரித நடையும்
காலிலே சப்பாத்தும் - உன்
கையிலே தண்ணீர் பொட்டிலும்
கை நழுவ விட்டு - நீ
கலந்தாயே அவன் தாள் நினைவில்
அப்பா, சகோதரம் - உன்னை
ஆசையுடன் பார்க்க இருக்க
அடுத்த பயணம் அழைத்து வாறேன் - உன்னை
என்றே நான் ஏங்கினேன் - ஆயினும்

## 53-வது நாள் நினைவஞ்சலி



திருமதி மகேஸ்வரி தில்லையம்பலநாதன்

செல்வி நளினி தில்லையம்பலநாதன் (ஆசிரியை, பாலிநகர் மகா வித்தியாலயம், மல்லாவி)

பிறப்பு 22-07-1944

பிறப்பு 12-05-1965

இறப்பு: 02-01-1993

அலைகடல் ஆழ்ந்த கிளாலிக் கடலிலே
அமைதியாக படகுதானும் சென்ற வேளையிலே
கயவரின் 'கண்போட்' கண் போட்டதோ
தண்ணீரும் உங்கள் உதிரத்தால் - செந்நீரானதோ
அன்னையின் மடியிலே உதிர்த்த உதயமும்
உதிர்ந்தீர்களே இருவரும் கிளாலிக் கடலிலே!
துடிக்கின்றோம் நீங்கள் இல்லாத
இந்த நாட்களை நினைத்து;

5 ஆம் வாய்க்கால் கிளிநொச்சி (கி-)

கணவன், அப்பா, பிள்ளைகள், சகோதரர்கள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

## நினைவு கூருகின்றோம்...

### 1993-02-23

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - நல்லூர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் வீரச்சாவெய்திய

வால் செய்து கொடுக்கப்படும் தொடர்புகளுக்கு கு. சுதேந்திரராஜ் வீரபத்திரர் கோவிலடி பழைய றோட், கோப்பாய், கு. சுதேந்திரராஜ் மூத்த விநாயகர் வீதி, இல. 09 கச்சேரி நல்லூர் (4321

## துளிர்

தமிழ் நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ், மற்றும் சலனம், சுபமங்களா, முன்றில், ஆசுவே, காலம், நந்தனா போன்ற தரமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் விற்பனையாகின்றன விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனாவீதி, யாழ்ப்பாணம். (4061)

## சைக்கிள் மாறிவிட்டது

15-02 93இல் இலங்கை வங்கிக்கு முன்பாக எனது சைக்கிள் மாறி எடுக்கப்பட்டு விட்டது தயவுசெய்து சைக்கிளை மாறி எடுத்தவர் எனது சைக்கிளை ஒப்படைத்து தனது சைக்கிளைப் பெற்றுக்கொள்ளும்படி இத்தால் வேண்டுகிறேன். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: க. பாலசுப்பிரமணியம், இல. 452, மொடேர்ண் கபே, ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம். (சி 6070)

## அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று(3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, வீரசிங்கம் வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம் கிளை; இலங்கை வங்கி அருகாமை சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள்) (சி-5918)

## நிர்வாகிகள் தெரிவு

நாவற்குழி லவனிதா குடியிருப்பு ''மாவீரர் நற்பணி மன்ற'' கூட்டம், கடந்த 15-02-93இல் மேற்படி மன்ற நிலையத்தில் நடைபெற்றது.

இம் முகாம் பொறுப்பாளர் திரு. தேவன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நடப்பு வருடத்திற்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. பா. பரமேஸ்வரன், உப தலைவர் திரு. அ. இராசேந்திரம், செயலாளர் திரு ஐ. நாகநாதன், உப செயலாளர் திரு இ. லெயோன்சி, பொருளாளர் திரு. மு. இந்திரன், இவர்களுடன் நிர்வாகசபை உறுப்பினர்கள் ஆறு பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்டவன் அடியில்

24-01-1993



## கனகரட்ணம் - ஜெகரூபி (ஆத்தை)

அன்ன நடையழகும் அம்மா - உன்
அசைந்தாடும் பொன்னூடலும்
வண்ண மதி முகமும் - உன்
வட்டப் பொட்டழகும்
மழலைச் சொல்லழகும்
மலர்கள் பறிக்கும் - உன்
கையழகும்
விளாடிக்கு விநாயகம்மா - நீ
விநாயகனை நினைக்கும் திறனும்
மாமா, மாமியுடன் மகிழ்ந்திருந்த - உன்
மகிழ்வு நிறையும் மறைந்தது ஏனம்மா!
அப்பா, அம்மா, அக்கா, அண்ணா - என
அழைத்திடும் வார்த்தை யெல்லாம்
அனலிலே பட்ட மெழுகுபோலானதம்மா!
தோளிலே புத்தகப் பையும் - உன்
துரித நடையும்
காலிலே சப்பாத்தும் - உன்
கையிலே தண்ணீர் பொட்டிலும்
கை நழுவ விட்டு - நீ
கலந்தாயே அவன் தாள் நினைவில்
அப்பா, சகோதரம் - உன்னை
ஆசையுடன் பார்க்க இருக்க
அடுத்த பயணம் அழைத்து வாறேன் - உன்னை
என்றே நான் ஏவினேன் - ஆயினும்
பறந்தாயம்மா! பாவியாம் - எம்மை
தரிக்கவிட்டாயம்மா!
மூன்று நாள் காய்ச்சலில் - உன்
முகம் வாடும் என நினைக்கவில்லை
கொடிய விஷம் தீண்டியவனை - கூடி
கூற்றுவன் தொடரவில்லை
பால மணம் மாறாத - உன்னை
பறித்தெடுத்து விட்டானம்மா!
தேனே திரவியமே தெவிட்டாத - தெள்ளமுதே!
மானே மலர் பறித்த கையையும் - உன்
மதி முகத்தையும் காணவர இயலாது
அம்பு பட்ட மான் போல - நான்
அக்கரையில் நின்று அலறித்துடித்தேனம்மா!
ஆத்தை, ஆத்தை என
அலறி நாம் துடித்திடும்
வார்த்தை தான் கேளாதோ! இவ்
வையகம் மீண்டும் நீ வாராயோ!

எனது அன்பு மழலைச் செல்வம் ஜெகரூபியின் திடீர் மறைவின் போது கலங்கிய எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், நாவலர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்து கொள்கின்றோம்.

நன்றி

அன்பு செல்வத்தின் துயரில் வாடும்
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்காமார், மாமாமார், மாமிமார்,
பெரியம்மா, அன்ரி.

605/1, கே கே எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (4331)

... கள், 80 மாணவர்கள் சீருடைகளையும்-

யாழ் மேற்கு பங்கினூடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் 27 மாணவிகள் 10 மாணவர் சீருடைகளையும்-

மானிப்பாய் பங்குத் தந்தை மூலம் 2,322 அப்பியாசப் புத்தகங்கள் 71 மாணவிகள், 90 மாணவர் சீருடை என்பனவும்-

முகமாலை பங்குத் தந்தையூடாக 1161 அப்பியாசப் புத்தகங்களையும், சாவகச்சேரி பங்கினூடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் 194 மாணவிகள் 87 மாணவர்கள் சீருடைகளையும்-

அரியாலை பங்குத் தந்தை மூலம் 1161 அப்பியாசப் புத்தகங்களையும் மிருசுவில் பங்குத் தந்தையூடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் 19 மாணவிகள் 25 மாணவர் சீருடைகளையும்-

கரவெட்டி பங்குத் தந்தை மூலம் 1161 அப்பியாசப் புத்தகங்கள் 325 மாணவிகள், 225 மாணவர் சீருடை என்பனவும்-

பருத்தித்துறை பங்குத் தந்தையூடாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் 55 மாணவிகள் 47 மாணவர்கள் சீருடை ஆகியனவும்-

யாழ் அடைக்கல நாயகி பங்குமூலம் 1161 அப்பியாசப் புத்தகங்கள் 43 மாணவிகள், 64 மாணவர் சீருடைகளும் -

குருநகர் பங்குத்தந்தை மூலமாக 1161 அப்பியாசக்கொப்பிகள், 20 மாணவிகள் 15 மாணவர் சீருடைகளையும்-

சில்லாலை பங்குத்தந்தை மூலமாக 1161 அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் 230 மாணவிகள் 200 மாணவர் சீருடைகளும்-

சுளிபுரம் காட்டுப்புலம் பகுதிக்கு 1161 அப்பியாசக் கொப்பிகள் மற்றும் 65 மாணவிகள் 53 மாணவர் சீருடை ஆகியனவும் வழங்கப்பட்டிருப்பதாக நிலைய நிவாரணப் பொறுப்பதிகாரி திரு. ஞா. அருளானந்தம் தெரிவித்தார்.

இப்பொருள்களை பெரும் சிரமங்கள் மத்தியில் கொழும்பில் இருந்து இயக்குநர் வண. ம. இ பயஸ் அடிகளார் எடுத்துவர துணிகளாக கொண்டுவரப்பட்டவை பல அளவுகளிலும் நிர்வாகச் செயலர் அருட்செல்வி எம். காஸ்மீர் மூலம் சீருடைகளாகத் தயாரிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள மாணவ மாணவிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளன. (21)

## மாசிமக இலட்சார்ச்சனை

(சுன்னாகம்)

தெல்லிப்பழை, துர்க்காபுரம் அருள்மிகு, ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய மாசி மக இலட்சார்ச்சனை எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. மாசி மகப் பெருவிழா அடுத்தமாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். உற்சவ காலத்தில் தினமும் திருவீதியுலாவும் இடம் பெறும். (11, 09)



| திருமதி மகேஸ்வரி தில்லையம்பலநாதன் | செல்வி நளினி தில்லையம்பலநாதன் (ஆசிரியை, பாலிநகர் மகா வித்தியாலயம், மல்லாவி) |
|---|---|
| பிறப்பு 22-07-1944 | பிறப்பு 12-05-1965 |

இறப்பு: 02-01-1993

அலைகடல் ஆழ்ந்த கிளாலிக் கடலிலே
அமைதியாக படகுதானும் சென்ற வேளையிலே
கயவரின் 'கண்போட்' கண் போட்டதோ
தண்ணீரும் உங்கள் உதிரத்தால் - செந்நீரானதோ
அன்னையின் மடியிலே உதித்த உதயமும்
உதிர்ந்தீர்களே இருவரும் கிளாலிக் கடலிலே!
துடிக்கின்றோம் நீங்கள் இல்லாத
இந்த நாட்களை நினைத்து;

| | |
|---|---|
| 5 ஆம் வாய்க்கால் | கணவன், அப்பா, பிள்ளைகள், |
| கிளிநொச்சி | சகோதரர்கள், மற்றும் உற்றார், |
| (கி-) | உறவினர், நண்பர்கள். |

## நினைவு கூருகின்றோம்...

## 1993-02-23

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - நல்லூர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் வீரச்சாவெய்திய

2-ம் லெப்.வெள்ளை (வேணாட் எட்வேட் ஸ்ரக் -இருதயபுரம்-மட்டு)

மன்னார்-முழங்காவில், நாயாற்றுவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

விஜி (சூசைப்பிள்ளை றேமன் றெக்கினால் - தேனுடையான் அடம்பன்-மன்னார்)

1988 ஆம் ஆண்டு மணலாறு - புதுக்குடியிருப்புப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

குமரன் (பிரகாஷ் அன்பரசன் - அலம்பில்-மணலாறு)

1989 ஆம் ஆண்டு மட்டு - விசாரமனைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

தயா (தம்பிராசா தயாபரன்-கோயில்போரதீவு-மட்டு)

பீற்றர் (குமாரசிங்கம் நடராசா-முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை-மட்டு)

யாழ்-கரவெட்டி, துன்னாலைப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட இளம் பெண் - பருத்தித்துறை, திக்கம் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டு-சந்திவெளிப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

ஜோண்சன் (- கோபால்-சந்திவெளி-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(B/6069)

நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

# தமிழீழ சமூகமும், பொருளாதார உட்கட்டுமானமும்

நாடுகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு அடிப்படையாகக் காணப்படும் முக்கிய அம்சம் உட்கட்டமைப்பு ஆகும். மனித உடலுக்கு எலும்புக்கூடு எவ்வாறு அடிப்படையாக அமைகிறதோ அவ்வாறே ஒரு தேசத்தின் பல்வேறு துறைசார்ந்த வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்திற்கும் உட்கட்டமைப்பு அடிப்படையாக அமைகிறது.

பொருளாதார வளர்ச்சி பற்றி சிந்திக்கும் போதெல்லாம் முதலில் உட்கட்டமைப்புப் பற்றிய அக்கறை ஏற்படல் வேண்டும். புதிய துறைகளில் விருத்தி செய்வது பற்றியே சிந்தித்தால் முதலில் அவற்றுக்குதவக் கூடிய உட்கட்டமைப்பு அம்சங்களில் கவனம் செலுத்தல் வேண்டும்.

பிரித்தானியர் இலங்கையில் பெருந்தோட்டங்களை திறக்குமுன் கொழும்பிற்கும், கண்டிக்கும் வீதியமைத்து கொழும்புத் துறைமுகத்தை நிர்மாணித்த தொண்டமை இங்கு நினைவு கூரத்தக்கது.

ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் பொருளாதாரத்தை சிதைக்க வேண்டுமானால் முதலில் அதன் கட்டமைப்புக்களையே சிதைப்பதில் கவனம் செலுத்துவார்கள். எமது பிரதேசத்தில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த பிரதான பாதைகள், தொலைத்தொடர்பு, மின்சாரம், நீர்ப்பாசன வசதிகள் என்பன சிதைக்கப்பட்டமைக்கான காரணங்களை புரிந்து கொள்ள முயலும் ஒருவர் ஒரு பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் உட்கட்டமைப்பின் முதன்மையை விளங்கிக்கொள்ள முடியும்.

## உட்கட்டமைப்பு வசதிகள்:

ஒரு நாட்டின் உட்கட்டமைப்பானது பரவலான நிர்மாணம் கைத்தொழிலுடன் தொடர்புடையதாகவே விளங்குகிறது. இதில் பல்வேறு துறைகள் உள்ளடக்கப்படுகின்றன.

உட்கட்டமைப்புத் துறைகளை பொருளாதார உட்கட்டமைப்புத்துறை என்றும் சமூக உட்கட்டமைப்புத்துறை என்றும் பாகுபடுத்திக் கொள்வதுண்டு. பொருளாதார உட்கட்டமைப்புத் துறையில் பின்வரும் உப துறைகளை உள்ளடக்க முடியும்.

1. விமான நிலையங்களும், துறைமுகங்களும்
2. நீர் வழங்கலும், சாக்கடை அமைப்பும்
3. வீதிகள், பாலங்கள், பெருந்தெருக்கள்
4. பிரதான நீர்வளச்செயற் திட்டங்களில் வருகின்ற நிலத்தடி நீரோட்ட அபிவிருத்தி வேலைகளை உள்ளடக்கிய நில அபிவிருத்திச் செயற்திட்டங்கள்
5. கிராம, நகர அபிவிருத்திச் செயற்திட்டங்கள்.
6. தொலைத் தொடர்பு செயற்திட்டங்கள்
7. மின்சார உற்பத்தி செயற்திட்டங்கள்
8. சுற்றுலாத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகள்
9. கைத்தொழில் வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள்
10. நீர்ப்பாசன நிலவடிகால் முறை, வெள்ளக் கட்டுப்பாட்டுக்கான ஏற்பாடுகள்.

இவையனைத்தும் நேரடியாக விவசாயம், கைத்தொழில், வியாபாரம், சுற்றுலா நிர்வாகம் போன்றவற்றின் முன்னேற்றங்களுடனும் தொடர்புடையன. இத்துறைகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டுமக்களின் வாழ்க்கை நலன்களையும் அதிகரிக்கச் செய்ய முடியும்.

இவ்வாறே சமூக மக்களினுடைய மேம்பாட்டிற்கு நேரடியாகவே உதவக் கூடிய உட்கட்டமைப்பு வசதிகள், சமூக உட்கட்டமைப்புத்துறை எனப்படுகின்றன. இதில் பல துறைகள் உள்ளடக்கப்படுகின்றன.

1. கல்வி, பயிற்சிமுறை என்பனவற்றுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள்
2. நலத்துறை, சமூக சேவைகள் என்பனவற்றுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள்
3. தனியார்துறை, அரச துறைகளிலான வீடமைப்பு.
4. கிராம, நகர குடும்பங்களுக்கான குடிநீர் வசதிகள்.
5. கிராம, நகர வதிவிடங்களுடன் தொடர்பான கழிவுநீர் வெளியேற்றல் தொடர்பான வசதிகள்.

பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளுடன் சமூக உட்கட்டமைப்பு வசதிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய முறையிலேயே செயற்படுதல் அவசியமாகிறது. ஒன்றுக்கு மற்றது உதவுவதாகவும் ஒன்றை ஒன்று பாதுகாப்பதாகவும் அமைவது அவசியமாகிறது.

## சமுதாயமும் உட்கட்டமைப்பும்:-

ஒரு சமூகத்தின் ஆரோக்கியமான வாழ்வு, பொருளாதார மேம்பாடு, சுதாகலம் என்பன உட்கட்டமைப்பு வசதிகளுடன் நெருக்கமான முறையில் தொடர்பு பட்டிருப்பதை அதிகமானோர் உணர்வதில்லை. உட்கட்டமைப்பு வசதிகளை அரசுகள் தங்கள் தேவைக்காக மாத்திரம் உருவாக்கியிருப்பதாக எண்ணுவதுண்டு.

உட்கட்டமைப்புத்துறையின் சமூக ரீதியான நன்மைகளை பின்வருமாறு நோக்குவோம்.

1. நல்ல வீதிகள், மின்சார வசதிகள், தொலைத் தொடர்பு வசதிகள் என்பன சீராக இருந்தால் தான் குறித்த பிரதேச மக்கள் தாமாக ஒரு தொழிற்சாலை அல்லது சிறு தொழிற்கூடத்தை இலாபகரமாகப் பராமரிக்க முடியும். தமது உற்பத்திகளை கிராமத்து மக்கள் உரிய காலத்தில் சந்தைப்படுத்த முடியும். சில்லறை வியாபாரிகள் தமக்குரிய பொருள்களை பாதுகாப்பாக விரைவில் கொண்டு வரவும், தங்கு வியாபார நிறுவனங்களைப் பராமரிக்கவும் முடியும்.

இதனால் தொழிற்துறை வளர்ச்சியடையும் விவசாயம் முன்னேறுவதுடன் பல்வேறு சேவைத் தொழில்கள் விரிவடையும் இதனால் இவற்றைச் சார்ந்து மேலும் பல உப தொழில்கள் உருவாகும். பெருந்தொகையான மக்களுக்கு முழுநேரத் தொழில் வாய்ப்பும் பகுதிநேரத் தொழில் வாய்ப்பும் கிடைக்கும். இதனால் மக்களின் வருமானம் உயரும். பொருளாதார வாழ்க்கைத்தரம் உயர்ந்து செல்லும்.

இதற்கு மாறாக ஒரு பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் சிதைந்தால் அங்கு முதலிடுவதை முதலீட்டாளர்கள் குறைத்துக் கொண்டு அங்கிருந்து இடம் பெயர்ந்து உட்கட்டமைப்பு வசதியுள்ள பகுதிக்குச் சென்று குவிந்து விடுவர். இதனால் குறித்த பிரதேசம் தன் பொருளாதார பலத்தை இழந்துவிடும்.

2. மக்கள் நலத்துறை வாழ்வை உட்கட்டமைப்பு வசதிகள் நிர்ணயிக்கின்றன. சாக்கடைகள் இல்லாது போனால் அல்லது சாக்கடைகள் சிதைவுற்றால் கழிவுநீர் வெளியேறாது. இதனால் துர்நாற்றம் எங்கும் பரவும் நோய்க்கிருமிகள் பெருக்கமடையும் மக்கள் நோயாளிகளாவர்.

3. வாய்க்கால்கள், வடிகால்கள், நீர்ப்பாசனக் குளங்கள் என்பவற்றை ஒரு சமூகம் பேணமறந்தால் இயற்கையின் சமநிலையையே இழக்க வேண்டி வரும். நல்ல மரங்கள் பயன் தரும் செடிவகைகள், பெறுமதியான விலங்குணவுகள் என்பவற்றைப் பேணுவதற்கு உட்கட்டமைப்பு வசதிகள் அவசியமாகின்றன.

சீரான வெள்ளக்கட்டுப்பாட்டுக் குளங்கள், மதகுகள் இல்லாமற்போனால் அங்குள்ள தென்னை, பனை, மா போன்ற மரங்கள் பெரியளவில் இடம் பெறும் இதனால் தாவரச்செழிப்பு இல்லாமற்போகும் இது பிரதேச அழகை பாதிப்பதோடு காலநிலையில் சீரற்ற தன்மையையும் கொண்டுவரும்

4. ஒரு சமூக முன்னேற்றம் அங்குள்ள நிறுவனங்களின் வளர்ச்சியிலும் செயற்பாட்டிலும் தங்கியுள்ளது கோவில்கள், சனசமூக நிலையங்கள் மாதர் மன்றங்கள் இளைஞர் சேவை நிறுவனங்கள். இளைஞர் விளையாட்டுக்கழகங்கள் போன்றவை அதிகளவில் உருவாகி ஊக்கத்துடன் பணியாற்றினால் தான் அச்சமூகம் நீண்ட காலத்தில் உரிய முன்னேற்றத்தை அடையும் இவை திறமையாக ஊக்கத்துடன் செயற்படுவதற்கு, உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் போதியளவில் இருத்தல் வேண்டும்.

## எமது பகுதிகளில் உள்ள உட்கட்டமைப்பு

எமது பிரதேசங்களில் உட்கட்டமைப்பு நிர்மாணம் அக்கறையின்றி சரியான ஒழுங்கு முறைக்குட்படாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

சந்தைகள் பாடசாலைகள், கோவில்கள், மருத்துவமனைகள், பிரதான வீதிகள் போன்ற மக்கள் பெருமளவில் நாளாந்தம் பயன்படுத்தும் பொது வசதிகளில் எவ்வித ஒழுங்கான விதிமுறைகளும் பின்பற்றப்படாமையை கண்டு கொள்ளலாம். இவற்றால் எழும் சுகாதாரக் கேடுகள், வசதியீனங்கள் பற்றித் தனித்தனியாக குறைபட்டுக் கொண்டாலும் அக்குறைபாடுகளைக் களைவதற்கான பொது நிகழ்ச்சித்திட்டங்களில் கவனம் செலுத்தப்படுவதில்லை.

இதைவிட எமது பகுதிகளிலுள்ள இவ்வுட்கட்டமைப்பானது எமது பிரதேச நலன்களுக்கு ஏற்ற விதத்தில் இல்லை ஆரம்பத்தில் காலனித்துவ நாடுகளால் எமது வளங்களை சுரண்டுவதையே நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட இவ்வுட்கட்டமைப்பானது பின்னர் சிறிலங்கா அரசினால் எமக்குப் பாதகமான நிலையிலேயே பேணப்பட்டது

இங்குள்ள வளங்களால் எமது தேவைகள் பூர்த்தி செய்யப்படத்தக்கதாக இங்குள்ள உட்கட்டமைப்பு அமைக்கப்படவில்லை. எமது தாயகப்பகுதிகள் சுயாட்சித் தன்மையை பெற்று விடக் கூடாதென்பதற்காக எமது உட்கட்டமைப்புகள் கொழும்பை நோக்கி, கொழும்பை மையப்படுத்தியே அமைக்கப்பட்டன இவ்வாறான ஆழமான அரசியல் நோக்கங்களோடு அமைக்கப்பட்டுள்ள இவ்வுட்கட்டமைப்பினால் எமது ஏராளமான வளங்கள் ஒழுங்காக பயன்படுத்தப்பட முடியாத நிலையிலுள்ளன.

இதனால் எமது வளங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதுடன் எம் மக்கள் தமது தேவைகளிற்கு சிறிலங்காவையே நாடவேண்டியுள்ளது. இதேபோல் கொழும்பில் மையப்பட்டுள்ள உட்கட்டுமானத்தால் எமது பொருண்மிய நடவடிக்கைகள் சிறிலங்காவிற்கூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன இக் காரணங்களாலேயே எதிரியால் பொருண்மியத் தடை மூலம் இங்கு ஒரு செயற்கையான பொருட்தட்டுப் பாட்டை ஏற்படுத்த முடிகிறது.

## தமிழீழத்திற்கான உட்கட்டுமானமும் உட்கட்டுமானப் பகுதியும்:

தமிழீழ தாயகத்தின் சுதந்திரத்திற்காக எமது முழுப் பகுதியையும் எமது இராணுவக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதுடன் எமக்கென தன்னிறைவான ஒரு பொருண்மியக் கட்டமைப்பையும் உருவாக்க வேண்டும். எனவே எமது பகுதிகள் தன்னிறைவான தனித்துவமான பொருண்மியக் கட்டமைப்பை பெறவிடக் கூடாதென்ற நோக்கோடு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ள எமது தற்போதைய உட்கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும்.

ஆகவே தமிழீழத்தின் பொருளாதாரத்தை வளம் படுத்துவதற்காக தற்போது சிறிலங்காவில் மையப்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பை மாற்றியமைத்து எமக்கென தனித்துவமான உட்கட்டுமானத்தை கட்டியெழுப்ப வேண்டும். இதை நோக்கமாகக் கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் உட்கட்டுமானப்பகுதி செயற்பட்டு வருகின்றது. இவ்வமைப்பானது எதிர்காலத் தமிழீழத்திற்கான சிறந்த உட்கட்டுமானத்தை திட்டமிடுவதுடன் அதற்கமைவாக தற்போது தேவையான கட்டுமானங்களை மேற்கொண்டும் வருகின்றது.

அண்மைக்காலத்தில் இருந்து எமது பிரதேசங்களில் இராணுவத் தாக்குதல்களாலும், சிறிலங்காவின் பொருண்மியத் தடையாலும் கட்டுமானப் பொருள்கள் கிடைக்காமையினாலும் எமது நிர்மாண வேலைகள் ஏறத்தாழ ஸ்தம்பிதமடைந்தன. வழமையான இயற்கைஅழிவுகளுக்குமேலாக போர் அழிவுகளும் சேர்ந்து கொள்ளும்போது மீள் புனர் கட்டுமானம் மிகவும் அவசியமானதாகும்.

கட்டுமானங்கள் தடைப்படும்போது உடனடி வசதியீனங்கள் மட்டுமன்றி நீண்டகாலப்பாதிப்புகளும் ஏற்படும். உதாரணமாக குளங்கள், வாய்க்கால்கள் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் வன்னிப்பிரதேசத்தில் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டு எமது பொருளாதாரம் பாதிக்கப்படும். யாழ். குடாவில் இதனால் நிலத்தடி நன்னீரின் உவர்த்தன்மை அதிகரிக்கும்,

இவ்வாறான பாதிப்புகள் ஏற்படாமலிருப்பதற்காக இன்றைய கட்டுமானவேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதற்கான முயற்சிகளில் உட்கட்டுமானப் பகுதி ஈடுபட்டு வருகின்றது. கிடைக்கும் வசதிகள் வாய்ப்புகளை பயன்படுத்தி நிர்மாண வேலைகளைமேற் கொள்வதுடன் இவ்வாறான வேலைகளிற்கு ஊக்கமும் வழங்குகின்றது.

நன்றி: ஆதாரம்

---

போத்தல் ஓட்டினால் குத்தப்பட்டார்

ஜனநாயக ஐ. தே. முன்னணிக்குள்

கலந்துரையாடல்

ராஜீவ்காந்தி கொலை வழக்கு

இறந்து போனவர்கள் மீது

பெருந்தோட்டங்களை இறக்கு முன் கொழும்பிலும், கண்டியிலும் வீதியமைத்து கொழும்புத் துறைமுகத்தை நிர்மாணித்துக் கொண்டமை இங்கு நினைவு கூரத்தக்கது.

ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் பொருளாதாரத்தை சிதைக்க வேண்டுமானால் முதலில் அதன் உட்கட்டமைப்புக்களையே சிதைப்பதில் கவனம் செலுத்துவார்கள். எமது பிரதேசத்தில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த பிரதான பாதைகள், தொலைத்தொடர்பு, மின்சாரம், நீர்ச்சுழங்கல் வசதிகள் என்பன சிதைக்கப்பட்டமைக்கான காரணங்களை புரிந்து கொள்ள முயலும் ஒருவர் ஒரு பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் உட்கட்டமைப்பின் முதன்மையை விளக்கிக்கொள்ள முடியும்.

## உட்கட்டமைப்பு வசதிகள்:

ஒரு நாட்டின் உட்கட்டமைப்பானது பரவலான நிர்மாணக் கைத்தொழிலுடன் தொடர்புடையதாகவே விளங்குகிறது. இதில் பல்வேறு துறைகள் உள்ளடக்கப்படுகின்றன.

உட்கட்டமைப்புத் துறைகளை பொருளாதார உட்கட்டமைப்புத்துறை என்றும் சமூக உட்கட்டமைப்புத்

8. சுற்றுலாத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகள்
9. கைத்தொழில் வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள்
10. நீர்ப்பாசன நிலவடிகால் முறை, வெள்ளக் கட்டுப்பாட்டுக்கான ஏற்பாடுகள்.

இவையனைத்தும் நேரடியாக விவசாயம், கைத்தொழில், வியாபாரம், சுற்றுலா நிர்வாகம் போன்றவற்றின் முன்னேற்றங்களுடனும் தொடர்புடையன. இத்துறைகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டுமக்களின் வாழ்க்கை நலன்களையும் அதிகரிக்கச் செய்ய முடியும்.

இவ்வாறே சமூக மக்களினுடைய மேம்பாட்டிற்கு நேரடியாகவே உதவக் கூடிய உட்கட்டமைப்பு வசதிகள், சமூக உட்கட்டமைப்புத்துறை எனப்படுகின்றன. இதில் பல துறைகள் உள்ளடக்கப்படுகின்றன.

1. கல்வி, பயிற்சித்துறை என்பவற்றுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள்
2. நலத்துறை, சமூக சேவைகள் என்பனவற்றுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள்
3. தனியார்துறை, அரசதுறைகளிலான வீடமைப்பு.
4. கிராம, நகர குடும்பங்களுக்கான குடிநீர் வசதிகள்.
5. கிராம, நகர வதிவிடங்களுடன் தொடர்பான கழிவுநீர்

...மாத்திரம் உருவாக்கியிருப்பதாக எண்ணுவதுண்டு.

உட்கட்டமைப்புத்துறையின் சமூக ரீதியான நலன்பாடுகளை பின்வருமாறு நோக்குவோம்.

1. நல்ல வீதிகள், மின்சார வசதிகள், தொலைத் தொடர்பு வசதிகள் என்பன சீராக விருத்தியுற்றால் குறித்த பிரதேச மக்கள் தாமாக ஒரு தொழிற்சாலை அல்லது சிறு தொழிற்கூடத்தை இலாபகரமாகப் பராமரிக்க முடியும். தமது உற்பத்திகளை கிராமத்து மக்கள் உரிய காலத்தில் சந்தைப்படுத்த முடியும். சில்லறை வியாபாரிகள் தமக்குரிய பொருள்களை பாதுகாப்பாக விரைவில் கொண்டு வரவும், தமது வியாபார நிறுவனங்களைப் பராமரிக்கவும் முடியும்.

இதனால் தொழிற்துறை வளர்ச்சியடையும். விவசாயம் முன்னேறுவதுடன் பல்வேறு சேவைத் தொழில்கள் விரிவடையும். இதனால் இவற்றைச் சார்ந்து மேலும் பல உப தொழில்கள் உருவாகும். பெருந் தொகையான மக்களுக்கு முழுநேரத் தொழில் வாய்ப்பும் பகுதிநேரத் தொழில் வாய்ப்பும் கிடைக்கும். இதனால் மக்களின் வருமானம் உயரும். பொருளாதார வாழ்க்கைத்தரம் உயர்ந்து செல்லும்.

இதற்கு மாறாக ஒரு பிர

...கள் அவசியமாகின்றன.

சீரான வெள்ளக்கட்டுப்பாட்டுக் குளங்கள், மதகுகள் இல்லாமற்போனால் அங்குள்ள தென்னை, பனை, மா போன்ற மரங்கள் பெருமளவில் இடம் பெறும் இதனால் தாவரச்செழிப்பு இல்லாமற் போகும் இது பிரதேச அழகை பாதிப்பதோடு காலநிலையில் சீரற்ற தன்மையையும் கொண்டுவரும்

4. ஒரு சமூக முன்னேற்றம் அங்குள்ள நிறுவனங்களின் வளர்ச்சியிலும் செயற்பாட்டிலும் தங்கியுள்ளது கோவில்கள், சனசமூக நிலையங்கள் மாதர் மன்றங்கள் இளைஞர் சேவை நிறுவனங்கள், இளைஞர் விளையாட்டுக்கழகங்கள் போன்றவை அதிகளவில் உருவாகி ஊக்கத்துடன் பணியாற்றினால் தான் அச்சமூகம் நீண்ட காலத்தில் உரிய முன்னேற்றத்தை அடையும் இவை திறமையாக ஊக்கத்துடன் செயற்படுவதற்கு, உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் போதியளவில் இருத்தல் வேண்டும்.

## எமது பகுதிகளில் உள்ள உட்கட்டமைப்பு

எமது பிரதேசங்களில் உட்கட்டமைப்பு நிர்மாணம் அக்கறையின்றி சரியான ஒழுங்கு முறைக்குட்படாமல் மேற்

...கப்பகுதிகள் சுயாட்சித் தன்மையை பெற்று விடக் கூடாதென்பதற்காக எமது உட்கட்டமைப்புகள் கொழும்பை நோக்கி, கொழும்பை மையப்படுத்தியே அமைக்கப்பட்டன. இவ்வாறான ஆழமான அரசியல் நோக்கங்களோடு அமைக்கப்பட்டுள்ள இவ்வுட்கட்டமைப்பினால் எமது ஏராளமான வளங்கள் ஒழுங்காக பயன்படுத்தப்பட முடியாத நிலையிலுள்ளன.

இதனால் எமது வளங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதுடன் எம் மக்கள் தமது தேவைகளிற்கு சிறிலங்காவையே நாடவேண்டியுள்ளது. இதேபோல் கொழும்பில் மையப்பட்டுள்ள உட்கட்டுமானத்தால் எமது பொருண்மிய நடவடிக்கைகள் சிறிலங்கா ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இக்காரணங்களாலேயே எதிரியால் பொருண்மியத் தடை மூலம் இங்கு ஒரு செயற்கையான பொருட்தட்டுப்பாட்டை ஏற்படுத்த முடிகின்றது.

## தமிழீழத்திற்கான உட்கட்டுமானமும் உட்கட்டுமானப் பகுதியும்:

தமிழீழ தாயகத்தின் சுதந்திரத்திற்காக எமது முழுப் பகுதியையும் எமது இராணுவக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதுடன் எமக்

...மையினாலும் எமது நிர்மாண வேலைகள் ஏறத்தாழ ஸ்தம்பிதமடைந்தன. வழமையான இயற்கை அழிவுகளுக்கு மேலாக போர் அழிவுகளும் சேர்ந்து கொள்ளும் போது மீள் புனர் கட்டுமானம் மிகவும் அவசியமானதாகும்.

கட்டுமானங்கள் தடைப்படும்போது உடனடி வசதியீனங்கள் மட்டுமன்றி நீண்டகாலப்பாதிப்புகளும் ஏற்படும். உதாரணமாக குளங்கள், வாய்க்கால்கள் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் வன்னிப்பிரதேசத்தில் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டு எமது பொருளாதாரம் பாதிக்கப்படும். யாழ். குடாவில் இதனால் நிலத்தடி நன்னீரின் உவர்த்தன்மை அதிகரிக்கும்.

இவ்வாறான பாதிப்புகள் ஏற்படாமலிருப்பதற்காக இயன்றளவு கட்டுமான வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதற்கான முயற்சிகளில் உட்கட்டுமானப் பகுதி ஈடுபட்டு வருகின்றது. கிடைக்கும் வசதிகள் வாய்ப்புகளை பயன்படுத்தி நிர்மாண வேலைகளைமேற் கொள்வதுடன் இவ்வாறான வேலைகளிற்கு ஊக்கமும் வழங்குகின்றது.

நன்றி: ஆதாரம்

---

## போத்தல் ஓட்டினால் குத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

சகோதரர்களுக்கிடையில் நடந்தசச்சரவை தடுக்கமுனைந்த தந்தை ஒருவர் போத்தல் ஓட்டினால் குத்தப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு 7-00 மணியளவில் அண்ணன் தம்பிகளிடையில் நடந்த கைகலப்பை இடையில் புகுந்து தடுக்கமுனைந்த தந்தையாரான தட்டாதெருவைச்சேர்ந்த சதாசிவம் என்பவரை மகன் போத்தல் ஒன்றை உடைத்து குத்தினார் எனவும் இதனால் கையில் பலத்த காயமடைந்த தந்தை யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிரிக்கெட் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையில் 19 வயதிற்குட்பட்ட வருடாந்த கிரிக்கெட் போட்டி இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் நண்பகல் 12 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

## ஜனநாயக ஐ. தே. முன்னணிக்குள் நெருக்கடி வலுக்கிறதாம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சட்டத்தில் திருத்தம் செய்ய திரு. லலித் அத்துலத் முதலி எடுக்கும் முயற்சிகள் கட்சிக்குள் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.

கட்சித் தலைவரையே கட்சியின் செயலாளராக்கும் நோக்கம் கொண்ட இந்த உத்தேசத்திட்டம் தொடர்பாக கட்சிச் செயலாளர் ஜீ. எம். பிரேமச்சந்திர, லலித் அத்துலத் முதலி பற்றி கடுமையாக விமர்சனம் செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

இத்திட்டத்தின்படி கட்சியின் தலைவராகவும் செயலாளராகவும் திரு லலித் அத்துலத் முதலியே இருப்பார். அடுத்த ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராகவரவும் அவரே முனைகிறார். எனவே கட்சிக்குள் பெரும் செல்வாக்கை வகிக்க அவர் முனைகிறார். எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில்

## இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் கால்நடைகள் மாய மறைவு

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளில் பொதுமக்களின் கால்நடைகள் திடீர் திடீரென காணாமல் போவதாக புகார் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட மக்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யும்படி வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். நவரத்தினராசா கேட்டுக் கொண்டுள்ளார். 1990 இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து கால்நடைகளை விட்டுச் சென்றவர்களின் கால்நடைகள் பிடிக்கப்பட்டு இறைச்சிக்கு அடிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

## கலந்துரையாடல்

கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்திற்கு புதிய அனுமதிகிடைத்த மாணவர்களுக்கான கலந்துரையாடல் 25-02-1993 வியாழக்கிழமை 10.00 மணிக்கு பல்கலைக்கழக, மறுமலர்ச்சிக் கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கருத்தரங்கு

சர்வ மத யோகாசன ஸ்தாபனம் நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு இம்மாதம் இருபத்தெட்டாம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் காமம், சுத்தம், யோகம் பற்றி பல்கலைக்கழக சமுதாய மருத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் சிவஞானசுந்தரம் நந்தி) யோகாசனக் கலாநிதி சுவாமி சிற்சிதானந்த சரஸ்வதி ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கு

## இறந்து போனவர்கள் மீது குற்றப்பத்திரம் இல்லை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திய விசேட புலனாய்வுப்பிரிவு கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 41 பேரில் 12பேர் மீதான குற்றச்சாட்டுக்களை கைவிட்டுள்ளது. இவர்கள் இறந்துபோன காரணத்தினால் இவர்கள்மீது வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

மேற்படி வழக்கு இரண்டாகப் பிரிக்கப் படுமிடத்து விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பொட்டு அம்மான் அகிலா ஆகியோரைக்கண்டுபிடித்து நீதிமன்றத்திற்கு கூட்டிவர முடியாததன் காரணத்தினால் இவர்கள்மீது தனியாகவழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது என ஜெக்கப் டயனியல் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 26 பேர் மீது வழக்குவிசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

ராஜீவ்காந்தி கொலையுண்ட இடத்தில் காணப்பட்ட நளினி முதலாவது எதிரியாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார் பூந்தமல்லி விசேட நீதி மன்றத்தில் இவ்வழக்கு அடுத்த மாதம் மூன்றாம்திகதி விசாரிக்கப்படவுள்ளது என தெரியவருகின்றது.

திரும்பத் திரும்ப தமது சட்டத்தரணிகளை மாற்றிக் கொள்ளும் சந்தேகநபர்கள் தம் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி பற்றிய திட்டவட்டமான முடிவெடுத்து வரவேண்டுமென நீதிபதி எஸ். எம். சித்திக் அறிவித்துள்ளார்.

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

திறப்புக் கோர்வை ஒன்று வீதியில் இருந்து கண்டு எடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி எமது பணிமனையில் பெற்றுக் கொள்ளவும்.

## வரலாற்று பொக்கிசங்களை பாதுகாக்க முன்வரவேண்டும்

### யாழ்ப்பாண கல்லூரி அதிபர் ஜெபநேசன்

(யாழ்ப்பாணம்)

எமது சமூகம் வரலாற்று நோக்கு இல்லாத ஓர் சமூகமாகவுள்ளது. சிங்கள மக்கள் மிகுந்த பிரயாசையுடன் தமது வரலாற்றை மகாவம்சம் என்ற நூலில் எழுதிவைத்துள்ளனர். இதேபோல இஸ்ரேலியர் தமது வரலாற்றை பழைய ஏற்பாட்டில் குறித்து வைத்துள்ளனர். ஆனால் எமது வரலாற்றைப் பற்றி பயனுள்ள எதுவுமே இதுவரை எழுதப்படவில்லை.

இவ்வாறு நேற்று காலை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற மாமனிதர் கலைஞானி அவர்களின், கலைஞானி அறக்கட்டளை அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி ஜெபநேசன் தெரிவித்தார்

நல்லூர் ஆதீன முதல்வர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ஜெபநேசன் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் இன்றைய நிலையில் ஒரு தனி மனிதனாகவே நின்று எமது வரலாற்று பொக்கிஷங்களை மாமனிதர் கலைஞானி அவர்கள் சேமித்து வைத்துள்ளார். இன்று உள்ள நிலையில் அவரது பொருட்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். அது போல் எமது வரலாற்று நோக்கும் பாதுகாக்கப்படல் வேண்டும். அப்போதுதான் எமது வருங்கால சமூகம் வளமுடன் வாழமுடியும் என்றார்.

## விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

தென்புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தால் நடாத்தப்படும் அருணா பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 27ம் திகதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறுமென நிலையச் செயலாளர் திரு. சு. சுரேஸ்குமார் அறிவித்துள்ளார். (25)


இளங்கலைஞர் மன்றத்தின்

இசை விழா

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவில்

15ஆம் நாள் நிகழ்ச்சிகள்

23-2-93 (செவ்வாய்) இன்று

இடம்: மன்றக் கலாமண்டபம்

மாலை 4.00 — 5.00 மங்கள இசை:
நாதஸ்வரம் ; எ. முருகானந்தம்
கே. ஸ்ரீசரன்
தவில் : என். ஆர் எஸ். ரவீந்திரன்
என். ஆர். எஸ். சுதாகரன்

5.00 — 5.15 வீணை
ஜெயபாரதி யோகநாதன், பாமினி தர்மலிங்கம்
மிருதங்கம் : கே. கண்ணதாசன்

5.15 — 5.30 பாட்டு
ஸ்ரீ. நந்தகோபன், ஞா. நர்மதா, சி மலர்விழா, சு ரஜனி, இ. துஷ்யந்தி சி. சிவாஜினி, ஸ்ரீ ஸ்ரீரஞ்சினி, வ. துஷ்யந்தி, சு. கமலினி,
வயலின்: இருஷ்ணவேணி மயில்வாகனம்
மிருதங்கம் : கே. கண்ணதாசன்

5.30—6.00 பாட்டு: நந்தினி ராமலிங்கம்
வயலின் : ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம் : கே. கண்ணதாஸன்

6.00 —6.45 பாட்டு: வாசஸ்பதி ரவீந்திரன்


# தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடை மனிதாபிமானமற்ற கொடூரச் செயல்

## அரச அதிபரிடம் யாழ். உ. அ. அதிபர் பிரிவு, தீவக உ. அ. அ. பிரிவு சார்பில் வழங்கிய மகஜர்

(நமது நிருபர்)

தமிழீழ பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக அரசினால் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அர்த்தமற்ற யுத்தத்தின் காரணமாக மக்கள் கடந்த மூன்று வருடமாக மாபெரும் பேரழிவைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த மூன்று வருடங்களாக அரசினால் எமது மக்களுக்கு எதிராக பொருளாதாரத் தடையை ஏற்படுத்தி தனது சொந்த மக்களையே தினமும் பட்டினிச் சாவிற்கு அழைத்துச் செல்கின்றது து மனிதாபிமானமற்ற கொடூரச் செயலாகும்.

இவ்வாறு யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மற்றும் தீவக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் பொதுஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளால் கையெழுத்திட்டு வழங்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அ அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

1990 யூன் மாதத்தில் போர் தொடங்கியதில் இருந்து யாழ்ப்பாண உ.அ அதிபர்பிரிவு, தீவக உ.அ அ. பிரிவுகளில் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களை தொழில் வாய்ப்பினை இழந்து சொந்த மண்ணிலே அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள் இவர்களில் பெரும்பாலானவர்கள் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களில் அரச ஊழியர்கள். ஓய்வூதியர்கள் அடங்குவர். இவர்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற நிவாரண உதவிகளோ அன்றி அத்தியாவசிய உலர் உணவில் கொள்வனவு வசதிகளோ படிப்படியாகக் குறைந்து கொண்டு போகின்றது அத்துடன் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லை. இருந்தும் அவற்றின் விலைவாசிகளின் ஏற்றம் பாமர மக்கள், அதிகவிலை கொடுத்து வாங்க முடியாத நிலையில் உள்ளார்கள்.

தெழிற்சாலைகள் தொழில் வழங்கும் நிறுவனங்கள் இராணுவ நடவடிக்கையால் அழிக்கப்பட்டுவிட்டன. கடல் பிராந்தியங்களில் மீன்பிடித் தொழிலுக்கோ செல்ல முடியாத நிலை. மேலும் அன்றாட கூலி வேலை, மேசன், தச்சுவேலைகள் செய்வோர் தொழில் வாய்ப்பினை இழந்து எதுவித தொழிலும் இன்றி நிர்க்கதியாகி உள்ளனர் இவர்களால் எப்படி அதிகவிலை கொடுத்து பொருள்களை வாங்க முடியும். அதனால் பொருளாதாரத்தடையை நீக்கி எமது மக்களின் அன்றாட உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியளவு தாராளமாக அத்தியாவசிய உணவுப்பொருள்களையும் குழந்தைகளின் பால்மா வகைகளையும் வரவழைத்து பட்டினிச் சாவிலிருந்து எமது மக்களை காப்பாற்றுமாறு வேண்டுகின்றோம்.

எமது மக்களின் தற்போதைய தரை மார்க்கமான போக்குவரத்துப் பாதை கிளாலி, இது கடல்வழி ஊடாகப் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது போக்குவரத்துக் கஷ்டம் காரணமாக மக்கள் எவ்வளவு கஷ்டத்தை அனுப

அத்துடன் பின்வரும் மூன்று கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமெனவும் அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

1 அனைத்து பொருளாதார முற்றுகைகளையும், தடைகளையும் அகற்றி தாராளமான உணவு, மற்றும் பொருள்களை வரவழைத்துமக்களை உடன் பட்டினிச்சாவில் நின்று காப்பாற்றி மக்களின் வறுமைக்கு வழி தேடுக.

2 பயங்கர போக்குவரத்துப் பாதையில் உள்ள இராணுவக் கொடுமைகளையும், இராணுவ முகாம்களையும் நீக்கி மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் பிரயாணம் செய்ய பூநகரி, சங்குப்பிட்டி பாதையை போக்குவரத்துக்காக திறந்து விட வேண்டும்.

3. சாதாரண மனிதனுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், கல்வி, சுகாதாரம், மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களை எவ்வித கட்டுப்பாடும் இன்றி பெற்றுக் கொள்ள வழி செய்ய வேண்டும்.

## பொது மலகூடம் அமைக்க திட்டம்

இவ்வாண்டில் யுனிசெப் உதவியுடன் யாழ். மாநகர சபைக்குட்பட்ட எல்லை பகுதியினுள் நூறு பொது மலசல கூடங்கள் அமைக்கப்பட உள்ளதாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம். தெய்வேந்திரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இம்மலகூடம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 1500/- செலவிடப்பட உள்ளதாகவும் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு வசதி குறைந்த மக்கள் வாழும் இடங்களில் இவை அமைக்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (17)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன வருடாந்தப் பொதுக்கூட்டம் 06-03-1993 சனிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறுமென யாழ். பிராந்திய

## பாசிப்பயறு செய்கைபண்ணை பொரு. கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய பொருளாதாரத் தடையால் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக இரண்டு மாத காலத்திற்குள் நல்ல விளைவைத் தரக்கூடிய பாசிப்பயற்றுச் செய்கையில் சகல மக்களையும் ஈடுபடுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் செய்திக்குறிப்பு ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

உள்ளூர் இனங்களிலும் மி77, எம். ஐ 4 ஆகிய இனங்கள் பெரிய பயறாக இருப்பதோடு மட்டுமல்லாது உச்ச விளைவினையும் தரக்கூடியதாகவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் மேற்படி கழக விவசாய பகுதியுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறு அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட மாம்பூக்களில் தத்தியின் தாக்கம் அதிகரிப்பு

யாழ். மாவட்டத்தில் மாம்பூக்களில் மாவிலைத்தத்தியின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் தெரிவித்துள்ளது.

இத்தகைய தாக்கத்திற்கு உட்பட்ட பூக்கள் கருகி வாடுவதோடு இலைகளும் கறுப்பாகக் காணப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகச்சிறிய இலையான் போன்ற மாவிலைத் தத்தியினால் இத்தாக்கம் ஏற்படுகிறது. இவை பூக்களிலும் இலைகளிலும் உள்ள சாற்றை உறிஞ்சிக் குடிப்பதனாலேயே பூக்கள் கருகுகின்றன.

இத் தாக்கத்தை பெவ்தயன் 50ஈ ஸி. என்றகி நமிநாசினியில் 28 மில்லி லீற்றர் எடுத்து 1?—15 லீற்றர் நீரில் கலந்து விசிறுவதன்மூலம் கட்டுப்படுத்தலாம் என்றும் மேலதிக விபரங்கட்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக விவசாய சூழல் பாதுகாப்பு பகுதியினருடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## சைக்கிள் பாதுகாப்பில் இல. செஞ்சிலுவைச்சங்கம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை இல ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபைக்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளைக்கும் இடையில் கைச்சாத்திடப்

## இளங்கலைஞர் மன்றத்தின்

# இசை விழா

உதயன் பத்திரிகை நிறுவனத்தின்
ஆதரவில்

## 15ஆம் நாள் நிகழ்ச்சிகள்

## 23-2-93 (செவ்வாய்) இன்று

## இடம்: மன்றக் கலாமண்டபம்

மாலை 4.00 — 5.00 மங்கள இசை:

நாதஸ்வரம்; எ. முருகானந்தம்
கே. ஸ்ரீசரன்
தவில்: என். ஆர் எஸ். ரவீந்திரன்
என். ஆர். எஸ். சுதாகரன்

**5.00 — 5.15 வீணை**

ஜெயபாரதி யோகநாதன், பாமினி தர்மலிங்கம்
மிருதங்கம்: கே. கண்ணதாசன்

**5.15 — 5.30 பாட்டு**

ஸ்ரீ. நந்தகோபன், ஞா. நர்மதா, சி மலர்விழா. ச ரஜனி, இ. துஷ்யந்தி சி. சிவாஜினி, ஸ்ரீ ஸ்ரீரஞ்சினி, வ. துஷ்யந்தி. க. கமலினி,
வயலின்: கிருஷ்ணவேணி மயில்வாகனம்
மிருதங்கம்: கே. கண்ணதாசன்

**5.30—6.00 பாட்டு: நந்தினி ராமலிங்கம்**

வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: கே. கண்ணதாசன்

**6.00—6.45 பாட்டு: வாசஸ்பதி ரஜீந்திரன்**

வயலின்: ஆர் எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: எஸ். துரைராஜா

**6.45 — 7.15 சிறப்புரை**

விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள்
கலந்து உரையாற்றுவர்

**7.15 — 8.15 மங்களஇசை**

நாதஸ்வரம்: கே. எம். பஞ்சாபிகேசன்
எம். பி நாகேந்திரன்
தவில்: கே. பழனிமலை எஸ் ட்சார்ணலிங்கம்
என். முருகையா ரி. சுந்தரலிங்கம்

**8.15 — 9.15 பரத நாட்டியம்**

கொக்குவில் "கலாபவன" மாணவிகள்
நாட்டுவாங்கம்: திருமதி சாந்தினி சிவநேசன்
பாட்டு: வர்ணராமேஸ்வரன்
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்
வயலின்: பாக்கியலட்சுமி நடராஜா

**9.15—10.15 காரை சுந்தரம்பிள்ளையின்**

நெறியாள்கையில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் வழங்கும் "பாஞ்சாலி சபதம்"

வாழ்த்துவோர்:

## ரூபன் ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி

(சி-5965)


பொதுஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளால் கையெழுத்திட்டு வழங்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அ அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்

## பொது மலகூடம் அமைக்க திட்டம்

இவ்வாண்டில் யுனிசெப் உதவியுடன் யாழ். மாநகர சபைக்குட்பட்ட எல்லை பகுதியினுள் நூறு பொது மலசல கூடங்கள் அமைக்கப்பட உள்ளதாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம். தெய்வேந்திரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இம்மலகூடம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 1500/- செலவிடப்பட உள்ளதாகவும் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு வசதி குறைந்த மக்கள் வாழும் இடங்களில் இவை அமைக்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (17)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன வருடாந்தப் பொதுக்கூட்டம் 06-03-1993 சனிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறுமென யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா அறிவித்துள்ளார். இக்கூட்டத்தில் பிரதேசசபைகள், நகரசபைகள், மாநகரசபை, சனசமூக நிலையங்களின் சமாச உறுப்பினர்கள் கலந்து கொள்வார்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வுத் திணைக்களத்தினால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படும் பொருள்களில் ஏற்படும் குறைபாடு உணவுப்பங்கீடு மற்றும் கொள்வனவு சம்பந்தமான விடயங்களை அரச அதிபர் மட்டத்தில் கலந்து ஆலோசிப்பதற்காக ஐந்து பேர்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் கூட்டுறவு உதவி ஆணையாளர் செ. சிவசுநாதன், கூட்டுறவுப் பகுதிப் பிரதிநிதி, தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் வை செந்தில்நாதன், யாழ் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சொலமன் சூ சிறில், கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ப. செல்லத்துரை ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

போகின்றது அத்துடன் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லை. இருந்தும் அவற்றின் விலைவாசிகளின் ஏற்றம் பாமர மக்கள், அதிகவிலை கொடுத்து வாங்க முடியாத நிலையில் உள்ளார்கள்.

தெழிற்சாலைகள் தொழில் வழங்கும் நிறுவனங்கள் இராணுவ நடவடிக்கையால் அழிக்கப்பட்டுவிட்டன. கடல் பிராந்தியங்களில் மீன்பிடித் தொழிலுக்கோ செல்ல முடியாத நிலை. மேலும் அன்றாட கூலி வேலை, மேசன், தச்சுவேலைகள் செய்வோர் தொழில் வாய்ப்பினை இழந்து எதுவித தொழிலும் இன்றி நிர்க்கதியாகி உள்ளனர் இவர்களால் எப்படி அதிக விலை கொடுத்து பொருள்களை வாங்க முடியும். அதனால் பொருளாதாரத்தடையை நீக்கி எமது மக்களின் அன்றாட உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியளவு தாராளமாக அத்தியாவசிய உணவுப்பொருள்களையும் குழந்தைகளின் பால்மா வகைகளையும் வழங்கி பட்டினிச் சாவிலிருந்து எமது மக்களை காப்பாற்றுமாறு வேண்டுகின்றோம்.

எமது மக்களின் தற்போதைய தரை மார்க்கமான போக்குவரத்துப் பாதை கிளாலி. இது கடலேரி ஊடாகப் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது போக்குவரத்துக் கஷ்டம் காரணமாக மக்கள் எவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். கடற்படைகளின் அட்டூழியங்கள் அடாவடித்தனங்கள் பயங்கரமான படுகொலைகள் இது ஒரு தனி மனிதனின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும். ஆகலால் பூநகரியில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றி எமது மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் பிரயாணம் செய்ய பூநகரி, சங்குப்பிட்டி கடல் மார்க்கமான பாதையை போக்குவரத்திற்காகத் திறந்துவிடல் வேண்டும்.

மருத்துவ வசதி இன்மையாலும் போசாக்கின்மையாலும் சிறுவர்கள், கர்ப்பிணித்தாய்மார்களின் உயிர் இழப்பு அதிகரித்து வருகின்றன அத்துடன் நேயும், ஊனரீதியான பாதிப்பும் அதிகரித்து வருகின்றன. பாடசாலை மாணவர்கட்குத் தேவையான உபகரணங்கள், வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாதகாரணத்தால் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள் எடுத்து வருவதற்கு கூட்டுப்படை தலைமை அலுவலகம் மறுத்துவிட்டது. இதனால் எமது மாணவர்களின் கல்வி திட்டமிட்டுப் பாழடிக்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதாரத் தடையால் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக இரண்டு மாத காலத்திற்குள் நல்ல விளைவைத் தரக்கூடிய பாசிப் பயற்றுச் செய்கையில் சகல மக்களையும் ஈடுபடுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் செய்திக்குறிப்பு ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

எம். ஐ 4 ஆகிய இனங்கள் பெரிய பயறாக இருப்பதோடு மட்டுமல்லாது உச்ச விளைவினையும் தரக்கூடியதாகவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் மேற்படி கழக விவசாய பகுதியுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறு அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ். மாவட்ட மாம்பூக்களில் தத்தியின் தாக்கம் அதிகரிப்பு

யாழ். மாவட்டத்தில் மாம்பூக்களில் மாவிலைத்தத்தியின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் தெரிவித்துள்ளது.

இத்தகைய தாக்கத்திற்கு உட்பட்ட பூக்கள் கருகி வடுவதோடு இலைகளும் கறுப்பாககாணப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகச்சிறிய இலையான் போன்ற மாவிலைத் தத்தியினால் இத்தாக்கம் ஏற்படுகிறது. இவை பூக்களிலும் இலைகளிலும் உள்ள சாற்றை உறிஞ்சிக் குடிப்பதனாலேயே பூக்கள் கருகுகின்றன.

இத் தாக்கத்தை பென்தயன் 50ஈ சி. என்ற கிருமிநாசினியில் 28 மில்லி லீற்றர் எடுத்து 12—15 லீற்றர் நீரில் கலந்து விசிறுவதன்மூலம் கட்டுப்படுத்தலாம் என்றும் மேலதிக விபரங்கட்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக விவசாய சூழல் பாதுகாப்பு பகுதியினருடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## சைக்கிள் பாதுகாப்பில் இல. செஞ்சிலுவைச்சங்கம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித்துறைக்கிளைபொறுப்பேற்று நடத்தவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் அண்மையில பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபைக்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. வி. செல்வராஜன் தெரிவித்தார். (25)

## சு. க. எம். பிக்கள் மீது சிறிமாவோ கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பிக்கள் இருவர் மீது கண்டனம் தெரிவித்து கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா கடந்த சனிக்கிழமை அறிக்கை ஒன்றை விடுத்தார்.

சிறிமாவோ பண்டார நாயக்கா விடுத்த இக் கண்டனம் கட்சியின் உள்விவகாரங்களை மேலும் மோசமடையச் செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வழமையான நடைமுறைக்கு மாறாக இந்த எம். பிக்கள் இருவர் மீதும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருப்பது சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் கிளர்ச்சி வாதிகளுக்கு விடுத்திருக்கும் நேரடி எச்சரிக்கை என கருதப்படுகிறது.

திரு. திலக் கருணாரத்னா, திரு. குணசேகரா ஆகிய இரு எம். பிகள் மீதுமே சிறிமாவோ மேற்படி கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

## நினைவு வாரம் நிறைவு

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றமும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமும் இணைந்து நடாத்திய தட்டெழுத்துக்கலை நிபுணர் ஷோக்கிஸ் முதலையா நினைவு வார விழா ஞானசம்பந்தர் கலை மண்டபத்தில் அதன் தலைவர் திரு. க இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவிலே வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு. சி. முருகேசம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் யாழ் பல்கலைக்கழக பொறியியல்பீடப் பேராசிரியர் க. நவரத்தினராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். விழாவிலே தட்டச்சு சுருக்கெழுத்துப் போட்டிகளும் கலைநிகழ்ச்சிகளும் மிகச்சிறப்பாகவெநடந்தேறின (25

சிந்தனைக்கு

சோதனையில் சிக்கிய உண்மையைக் காட்டிலும் செழிப்பில் திளைக்கும் தவறையே மனிதர் விரும்ப முற்படுவர்.

—ஜெரேமி டேய்லர்.

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 23-02-1993
தொலைபேசி

## சிறிது சிந்தித்தால் போதும்

"யாழ். கடல் நீரேரிப் பகுதி ஊடாக போக்குவரத்துச் செய்யும் அப்பாவிப் பொதுமக்களை மனித கேடயங்களாக, கவசங்களாக விடுதலைப் புலிகள் பயன்படுத்துவதாக சிறிலங்கா இராணுவம் தெரிவிப்பதில் உண்மையில்லை. இதனை நேரடியாக நான் அவதானித்ததில் இருந்து கண்டு கொண்டேன்" என இலங்கைக்கான பி.பி.ஸி. செய்தியாளர் சுவாக்கா நோசு தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி. செய்தியாளரின் கூற்றினால் இலங்கைத் தமிழ் மக்கள் ஆச்சரியப்படவோ அன்றி அதிசயப்படவோ ஏதுமில்லை. ஏனெனில் அவர்கள் நிதர்சனத்தை தரிசித்துக் கொண்டிருப்பவர்கள். புலிகள் எப்பொழுதும் தமிழ் மக்களுக்காக தமது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்களே ஒழிய மற்றவரின் மரணத்தில் தம்மைக் காத்துக் கொள்பவர்கள் அல்ல என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

ஆகையினால் பி.பி.ஸி. செய்தியாளரின் இக்கூற்று சிங்கள மக்களுக்கும், உலகிலுள்ள ஏனைய மக்களுக்குமே உரியதாகும். அத்தோடு மனித நேயம் மனித உரிமைகள் பற்றி பேசிக்கொண்டு சிறிலங்கா அரசிற்கு தாராள உதவிகளை வழங்கி வரும் அரசுகளுக்கும், கிளாலிப் பாதை விவகாரத்தில் ஈடுபாடு கொண்டுள்ள சர்வதேச அமைப்புக்களுக்குமே புரிய வேண்டியவை ஆகும்.

விடுதலைப் புலிகள் மக்களை மனித கேடயங்களாகப் பாவிக்கின்றார்கள் என்ற பிரசாரத்தை முதலில் ஆரம்பித்தது இந்திய இராணுவமே. தமது தோல்விகளை மூடி மறைக்கவும், தாம் புரியும் படுகொலைகளுக்கு நியாயம் கற்பிக்கவுமே இவ்வாறான பிரசாரம் பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னர் இரண்டாம் கட்ட ஈழப் போரில் சிறிலங்கா அரசாங்கமும் இவ்வாறான பிரசாரங்களுக்கு முதன்மை கொடுத்தது.

ஆனால் இப்பிரசாரங்களில் எதுவித உண்மையும் இல்லை என்பதை போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கை கூர்மையாக அவதானிக்கும் எவரும் புரிந்து கொள்ள முடியும். உதாரணமாகக் கூறின் வடபகுதியில் இருந்து குறிப்பாக யாழ் குடாநாட்டில் இருந்து தெற்கு நோக்கிச் செல்பவர்களில் 90 வீதத்திற்கு மேற்பட்டோர் திரும்பவும் குடாநாட்டிற்கு திரும்பி விடுகின்றனர். இவர்கள் பயணத்தின் போது மனிதகேடயங்களாக பாவிக்கப்பட்டிருப்பின் அவர்கள் தமது உயிரை மீண்டும் ஒருமுறை பணயம் வைத்து யாழ். குடாநாட்டிற்குள் பிரவேசிக்க விரும்புவார்களா?

மேலும் எப்பகுதியில் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றாலும் மக்கள் புலிகளின் பாதுகாப்பிலுள்ள பகுதி நோக்கி இடம் பெயர்கின்றார்களே ஒழிய இராணுவத்தின் பகுதி நோக்கி இடம் பெயா

# நெருக்கடியில் நரசிம்மராவ்

இந்தியப் பாராளுமன்றத்தில் பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமாகியது. மக்கள் பிரதிநிதித்துவ சபையான லோக் சபாவும், மாநிலங்களவையான ராஜ்ய சபாவும் இணைந்ததான முதலாவது கூட்டத் தொடரில் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவின் ஆரம்ப உரையைத் தொடர்ந்து பாராளுமன்றம் சம்பிரதாய பூர்வமாக தனது கூட்டத்தொடரை ஆரம்பித்தது. மே மாதம் ஏழாம் திகதிவரை நீடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள இக்கூட்டத்தொடர் காங்கிரஸ் கட்சியை பொறுத்தும், பிரதமர் நரசிம்மராவைப் பொறுத்தும் முக்கியமான தாக விளங்கப் போகின்றது.

அயோத்தியா சம்பவங்களைத் தொடர்ந்து பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஏற்பட்ட அமளிதுமளிகளையடுத்து ஒத்திவைக்கப்பட்டபின்னர் மீண்டும் பாராளுமன்றம் கூடுவது இதுவே முதல் தடவையாகும். இதனால் இந்தக்கூட்டத்தொடர் பலரது கவனத்தையும் ஈர்க்கும் அதேசமயம் எதிர்வரும் புதன்கிழமையன்று ரயில்வே பட்ஜெட்டும், சனிக்கிழமையன்று பொது பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட விருப்பது மற்றுமொரு முக்கிய அம்சம் ஆகும்.

இதேவேளை நாளைமறுதினம் புதுடில்லியில் ஆர்ப்பாட்ட பேரணி நடத்த பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி திட்டமிட்டுள்ளது. சுமார் பதினைந்து லட்சம் பேர் கலந்து கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும். இப்பேரணியின் முக்கிய நோக்கமே பிரதமர் நரசிம்மராவ் பதவி விலகி பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்த வேண்டும் எனக் கோருவதேயாகும். எனினும் இப்பேரணியை நடத்த விடாமல் தடுக்கும் நோக்குடனும், பாரதீய ஜனதாவின் கோரிக்கையை முறியடிக்கும் வகையிலும் மத்திய அரசு செயற்பட்டு வருகின்றது. வன்முறைகளைத் தூண்டலாம் என்ற காரணத்தைக் காட்டி பாரதீய ஜனதாக் கட்சியின் பேரணிக்கு தடை விதிப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் பாரதீய ஜனதாக் கட்சியோ பேரணியை நடத்தியே தீருவது என்றும், பேரணிக்கு தடை விதிக்கப்பட்டால் அது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அரசியல் செயற்பாட்டிற்கு தடைவிதிப்பது போலாகும் என்றும் பிரசாரத்தில் இறங்கியுள்ளன. முன்னையதிலும் பாரா ளுமன்றத்தில் சர்ச்சைகளைக் கிளப்புவது என்று இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் கூட்டாக முடிவு செய்துள்ளன. ஆதாவது இடதுசாரிக்கட்சிகள் நரசிம்மராவ் அரசுக்கு தலையிடி கொடுக்கத் திட்டமிட்டுள்ளன.

அத்துடன் உரம் போன்ற பொருள்களுக்கான மானியம் குறைக்கப்பட்டமை உட்பட விலைவாசி உயர்வு போன்ற பல பிரச்சினைகளைக்கிளப்பி நரசிம்மராவ் அரசுக்கு சங்கடத்தைத் தோற்றுவிக்க தேசிய முன்னணிக் கட்சிகளும் ஆலோசனை செய்துள்ளன.

### நரசிம்மராவ் நண்பர்களை இழந்துவிட்டாரா?

இது இவ்விதம் இருக்க காங்கிரஸ் கட்சியின் தோழமை அணியாக இதுவரை செயற்பட்டு வந்த அ.இ.அ.தி.மு.க பட்ஜெட் கூட்டத்தொடரில் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. தமிழ்நாட்டில் மாநில அரசுக்கும் - காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் இப்போது ஒன்றும் இரகசியமானதல்ல. நண்பராக நடித்து முதுகில் குத்துபவர்களை விட நேர்மையான எதிரிகளே மேல் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா காங்கிரஸ் கட்சியை பகிரங்கமாக வர்ணிக்கும் அளவுக்கு காங்கிரஸ் அ.தி.மு.க. உறவு சீர்கெட்டுப் போயுள்ளது. மாநில அமைச்சர்கள் பலரும் கூட்டணி உறவு முறிந்து விட்டதாக பகிரங்கமாகவே கூறிவருகின்றனர்.

ஆனால் காங்கிரஸ் கட்சியின் சார்பில் புதுடில்லி சென்ற தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் மெட்டிப் பாம்பாக அடங்கிப் போயுள்ளனர். புதுடில்லியிலிருந்து பிரதமர் நரசிம்மராவின் விசேட தூதுவர்களாக சென்னை வந்த மோதிலால் வோராவும், இணை அமைச்சர் கே. வி. தங்கபாலுவும் அ. இ. அ. தி. மு. கவின் பொறுப்புமிக்க தலைவர்கள் எவருடனும் நேரடிப் பேச்சு நடத்தியதாக இன்னும் செய்திகள் வராத போதும் கூட்டணி உறவு தொடரும் என்பதில் நம்பிக்கை கொண்டிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற வகை

ஆனால் விவேகானந்தர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள தமிழ்நாட்டின் கன்னியாகுமரிக்கும், ராஜீவ் காந்தி சிலை திறப்பு விழாவிற்காக சென்னைக்கும் வந்த பிரதமர் நரசிம்மராவ் முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து பேச்சு நடத்தியிருப்பது தெரிந்ததே. ஜெயலலி



தாவின் வீட்டில் விருந்துண்ட பின்னர் கூட்டணி எதிர்காலம் குறித்து நரசிம்மராவ் நம்பிக்கையோடு பேசிய போதும் அ. இ. அ. தி. மு க தரப்பில் இருந்து அத்தகைய நட்புறவுக் குரல் எதுவும் கிளம்பியதாகத் தெரியவில்லை.

### தமிழக நிலை

இதனிடையே தமிழ்நாட்டில் அடுத்த பொதுத் தேர்தலின் போது அ. இ. அ. தி. மு க. பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி அமைக்கும் என்றும் ஒரு செய்தி பரப்பப்பட்டு வருகின்றது. ஆனால் சுப்பிரமணியம் சுவாமி என்று இந்திய அரசியல் வானில் விமரிசிக்கப்படும் பாரதீய ஜனதாக் கட்சி பொதுச் செயலாளர்களில் ஒருவரான கோவிந்தாச்சார்யா இந்த கூட்டணி குறித்து பேசிக் கொண்டிருந்தாலும், தமிழ் நாட்டில் தமது கட்சி சுயமாகவே வளர்ந்து வருவதாகவும், தமது கட்சி எவரது தயவையும் நாடி நிற்கவில்லை என்றும் பகிரங்கமாகக் கூறியுள்ளார். அதுவும் தமிழ்நாட்டின் சேலம் நகரில், இந்து முன்னணியின் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் கோவிந்தாச்சார்யா இவ்விதம் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

மேலும் தமிழகத்தில் இத்தகைய கூட்டணி ஒன்று ஏற்பட்டால் வகுப்புவாத, மதவாத சக்திகளை ஒன்றுபட்டு எதிர்ப்பது என்ற பேரவையின் கீழ் டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி திராவிட முன்

அ.இ.அ.தி.மு.கவின் ஆதரவு காங்கிரஸ் கட்சிக்கு கிடைக்குமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறான நிலையில்தான் தமிழக முதல்வர் ஜெயலலிதா தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து சென்னையில் ஆலோசனை நடத்தியிருப்பதுடன் பட்ஜெட் விவாதத்தின் போது எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்று அறிவுரை வழங்கியிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த அறிவுரை என்ன என்பது பகிரங்கப்படுத்தப்படாத மர்மமாகவே நீடிக்கின்றது.

எனினும் தமிழக சட்டசபையில் காங்கிரஸ் கட்சியினர் காட்டிய எதிர்ப்புக்கும் தமிழ்நாட்டில் ஆளும் கட்சியின் நடவடிக்கைகள் மீது கண்டனம் தெரிவிப்பதற்கும் பழிவாங்க இந்த சந்தர்ப்பத்தை ஜெயலலிதா பயன்படுத்தமாட்டார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்றே கூறலாம்.

இது இவ்விதமிருக்க மத்திய அரசு சீனி, அரிசி போன்ற பாவனைப் பொருட்களுக்கான மானிய உதவிகளைக் குறைத்திருப்பதைக் கண்டித்து ரயில் மறிப்பிலும், கப்பல் மறிப்பிலும் மத்திய அரசு அலுவலகங்களுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் அ.இ.அ.தி.மு.க இறங்கியிருப்பது முக்கியமானது. ஒன்றாகும் அத்துடன் தொலைக்காட்சி மூலமான இந்திமொழி திணிப்பு பற்றியும் அ.தி.மு.க. தலைமை திடீர் கவலை கொண்டிருக்கின்றது.

இவ்வாறாக காங்கிரஸ்கட்சி வெளியே இருந்து வரும் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய அதே வேளை உட்கட்சி நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையிலேயே உள்ளது. ஏற்கனவே காங்கிரஸ்கட்சிக்குள் இருக்கும் பூசல்கள் மற்றும் மோதல்கள் போதாது என்ற நிலையிலோ என்னவோ பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் பதவிவிலக வேண்டுமென மகாராஷ்டிரா மாநில காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பிரதமர் நரசிம்மராவுக்கு போட்டியாளராக வரக்கூடியவர் என்று கருதப்படுவர்களில் ஒருவரான சரத்பவாருக்கு எதிராக கிளப்பப்பட்டிருக்கும் இவ் எதிர்ப்பு காங்கிரஸ் பிளவின் சிகரம் எனலாம்.

இத்தகைய சூழலில்தான் நரசிம்மராவ் அரசு பட்ஜெட் கூட்டத் தொடரை எதிர்நோக்கியுள்ளது. மேகாலயா, திரிபுரா, நாகலாந்து மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி சட்டமன்றத் தேர்தல்களில் பெற்றுள்ள வெற்றி என்ற டானிக் மட்டுமே இந்தக் கூட்டத்

யாளர் சுவாக்கா நோசு தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. செய்தியாளரின் கூற்றினால் இலங்கைத் தமிழ் மக்கள் ஆச்சரியப்படவோ அன்றி அதிசயப்படவோ ஏதுமில்லை. ஏனெனில் அவர்கள் நிதர்சனத்தை தரிசித்துக் கொண்டிருப்பவர்கள். புலிகள் எப்பொழுதும் தமிழ் மக்களுக்காக தமது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்களே ஒழிய மற்றவரின் மரணத்தில் தம்மைக் காத்துக் கொள்பவர்கள் அல்லஎன்பது அவர்களுக்குநன்குதெரியும்.

ஆகையினால் பி. பி. ஸி. செய்தியாளரின் இக்கூற்று சிங்கள மக்களுக்கும், உலகிலுள்ள ஏனைய மக்களுக்குமே உரியதாகும். அத்தோடு மனித நேயம் மனித உரிமைகள் பற்றி பேசிக்கொண்டு சிறிலங்கா அரசிற்கு தாராள உதவிகளைவழங்கி வரும் அரசுகளுக்கும், கிளாலிப் பாதை விவகாரத்தில் ஈடுபாடு கொண்டுள்ள சர்வதேச அமைப்புக்களுக்குமே புரிய வேண்டியவை ஆகும்.

விடுதலைப் புலிகள் மக்களை மனித கேடயங்களாகப் பாவிக்கின்றார்கள் என்ற பிரசாரத்தை முதலில் ஆரம்பித்தது இந்திய இராணுவமே. தமது தோல்விகளை மூடி மறைக்கவும், தாம் புரியும் படுகொலைகளுக்கு நியாயம் கற்பிக்கவுமே இவ்வாறான பிரசாரம் பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னர் இரண்டாம் கட்ட ஈழப் போரில் சிறிலங்கா அரசாங்கமும் இவ்வாறான பிரசாரங்களுக்கு முதன்மை கொடுத்தது.

ஆனால் இப்பிரசாரங்களில் எதுவித உண்மையும் இல்லை என்பதை போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கை கூர்மையாக அவதானிக்கும் எவரும் புரிந்து கொள்ள முடியும் உதாரணமாகக் கூறின் வடபகுதியில் இருந்து குறிப்பாக யாழ் குடாநாட்டில் இருந்து தெற்கு நோக்கிச் செல்பவர்களில் 90 வீதத்திற்கு மேற்பட்டோர் திரும்பவும் குடாநாட்டிற்கு திரும்பி விடுகின்றனர். இவர்கள் பயணத்தின் போது மனிதகேடயங்களாக பாவிக்கப்பட்டிருப்பின் அவர்கள் தமது உயிரை மீண்டும் ஒருமுறை பணயம் வைத்து யாழ். குடாநாட்டிற்குள் பிரவேசிக்க விரும்புவார்களா?

மேலும் எப்பகுதியில் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றாலும் மக்கள் புலிகளின் பாதுகாப்பிலுள்ள பகுதி நோக்கி இடம் பெயர்கின்றார்களே ஒழிய இராணுவத்தின் பகுதி நோக்கி இடம் பெயரவில்லை. புலிகள் மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தின் இவ்வாறானதொரு நிலை உருவாகுமா? மக்கள் என்ன மடையர்களா?

அத்தோடு மனிதக் கேடயங்களாக மக்களைப் பயன்படுத்துவது எந்தவகையில் நடைமுறைச் சாத்தியமாகக்கூடியது. மக்கள் திரண்டெழுந்தால் ஆயுதத்தால் என்ன செய்ய முடியும். சிலரை அல்லது பலரைக் கொல்லலாம். ஆனால் அவர்களால் மக்கள் மத்தியில் நிலைத்துநிற்க முடியுமா? எத்தனையோ நாடுகளில் ஆயுதங்கள் மக்கள் முன் மண்டியிட்டதாகவே வரலாறு உண்டு. மக்கள், ஆயுதத்தின் முன் மண்டியிட்டதாக வரலாறு இல்லை.

இந்நிலையில் இலங்கையின் இனப் பிரச்சினையில் தொடர்புபட விரும்புகின்றவர்கள் யாராக இருப்பினும் முதலில் இனப்பிரச்சினை தொடர்பாக அடிப்படை அம்சங்களை விளங்கிக் கொள்வதோடு பாதிக்கப்பட்ட தமிழர்களின் நிலைப்பாட்டினையும் அம்மக்களுக்குத் தலைமைதாங்கிப்போராட்டத்தை நடத்தி வரும் விடுதலைப்புலிகளினது நிலைப்பாட்டை அறிந்து கொள்ளுதல் விரும்பத்தக்கதாகும். மேலும் கடந்த காலத்தில இலங்கைத் தமிழ் மக்களுக்கு சிறிலங்கா அரசாங்கம் இழைத்த துரோகங்களையும் அவர்களை ஏமாற்றியதையும் அறிந்து கொள்வதோடு இப்போது நடைபெறும போர் பற்றி சிறிலங்கா அரசாங்கம் கூறுவதில் உண்மை எது பொய் எது என தெளிவாக அறிந்து கொள்ளுதலும் உபயோகமானதாகும். ஏனெனில் போராட்டத்திற்கான நியாயத்தையும் தீர்விற்கான அடிப்படை திட்டத்தையும் அப்பொழுதே அவர்களால் சுலபமாகக் கண்டு கொள்ள முடியும்.

---

ளுமன்றம் கூடுவது இதுவே முதல் தடவையாகும். இதனால் இந்தக் கூட்டத்தொடர் பலரது கவனத்தையும் ஈர்க்கும் அதேசமயம் எதிர்வரும் புதன்கிழமையன்று ரயில்வே பட்ஜெட்டும், சனிக்கிழமையன்று பொது பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட விருப்பது மற்றுமொரு முக்கிய அம்சம் ஆகும்.

இதேவேளைநாளைமறுதினம் புதுடில்லியில் ஆர்ப்பாட்ட பேரணி நடத்த பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி திட்டமிட்டுள்ளது. சுமார் பதினைந்து லட்சம் பேர் கலந்து கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும். இப்பேரணியின் முக்கிய நோக்கமே பிரதமர் நரசிம்மராவ் பதவி விலகி பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்த வேண்டும் எனக் கோருவதேயாகும். எனினும் இப்பேரணியை நடத்த விடாமல் தடுக்கும் நோக்குடனும், பாரதீய ஜனதாவின் கோரிக்கையை முறியடிக்கும் வகையிலும் மத்திய அரசு செயற்பட்டு வருகின்றது. வன்முறைகளைத் தூண்டலாம் என்ற காரணத்தைக் காட்டி பாரதீய ஜனதாக் கட்சியின் பேரணிக்கு தடை விதிப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் பாரதீய ஜனதாக் கட்சியோ பேரணியை நடத்தியே தீருவது என்றும், பேரணிக்கு தடை விதிக்கப்பட்டால் அது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அரசியல் செயற்பாட்டிற்கு தடைவிதிப்பது போலாகும் என்றும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

மேலும் வகுப்புவாத உணர்வுகளால் நாடு சீர்கெட்டுள்ள நிலைமை, அயோத்தி விவகாரத்தை சரியான முறையில் கையாள மத்திய அரசு தவறியுள்ளமை, விலைவாசி உயர்வு போன்ற பல பிரச்சி[illegible]

[illegible] கட்சியை ஆதரிக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. தமிழ்நாட்டில் மாநில அரசுக்கும் - காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் இப்போது ஒன்றும் இரகசியமானதல்ல. நண்பராக நடித்து முதுகில் குத்துபவர்களை விட நேர்மையான எதிரிகளே மேல் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா காங்கிரஸ் கட்சியை பகிரங்கமாக வர்ணிக்கும் அளவுக்கு காங்கிரஸ் அ. தி. மு. க. உறவு சீர்கெட்டுப் போயுள்ளது. மாநில அமைச்சர்கள் பலரும் கூட்டணி உறவு முறிந்து விட்டதாக பகிரங்கமாகவே கூறிவருகின்றனர்.

ஆனால் காங்கிரஸ் கட்சியின் சார்பில் புதுடில்லி சென்ற தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் பெட்டிப் பாம்பாக அடங்கிப் போயுள்ளனர். புதுடில்லியிலிருந்து பிரதமர் நரசிம்மராவின் விசேட தூதுவர்களாக சென்னை வந்த மோதிலால் வோராவும், இணை அமைச்சர் கே. வி. தங்கபாலுவும் அ. இ. அ. தி. மு. கவின் பொறுப்புமிக்க தலைவர்கள் எவருடனும் நேரடிப் பேச்சு நடத்தியதாக இன்னும் செய்திகள் வராத போதும் கூட்டணி உறவு தொடரும் என்பதில் நம்பிக்கை கொண்டிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற வகையில் பிரதமர் நரசிம்மராவ் மற்றும் அ. இ. அ. தி. மு. க தலைவர் என்ற வகையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா இருவருமே கூட்டணியின் எதிர்காலம் குறித்து திட்டவட்டமாக தெரிவிக்க முடியும் என்று கூறப்படுகிறது.

பின்னர் கூட்டணி எதிர்காலம் குறித்து நரசிம்மராவ் நம்பிக்கையோடு பேசிய போதும் அ. இ. அ. தி. மு க தரப்பில் இருந்து அத்தகைய நட்புறவுக் குரல் எதுவும் கிளம்பியதாகத் தெரியவில்லை.

## தமிழக நிலை

இதனிடையே தமிழ்நாட்டில் அடுத்த பொதுத் தேர்தலின் போது அ. இ. அ. தி. மு க. பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி அமைக்கும் என்றும் ஒரு செய்தி பரப்பப்பட்டு வருகின்றது. ஆனால் மற்றுமொரு சுப்பிரமணியம் சுவாமி என்று இந்திய அரசியல் வானில் விமர்சிக்கப்படும் பாரதீய ஜனதாக் கட்சி பொதுச் செயலாளர்களில் ஒருவரான கோவிந்தாச்சயா இந்த கூட்டணி குறித்து பேசிக் கொண்டிருந்தாலும், தமிழ் நாட்டில் தமது கட்சி சுயமாகவே வளர்ந்து வருவதாகவும், தமது கட்சி எவரது தயவையும் நாடி நிற்கவில்லை என்றும் பகிரங்கமாகக் கூறியுள்ளார். அதுவும் தமிழ்நாட்டின் சேலம் நகரில், இந்து முன்னணியின் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் கோவிந்தாச்சயா இவ்விதம் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

மேலும் தமிழகத்தில் இத்தகைய கூட்டணி ஒன்று ஏற்பட்டால் வகுப்புவாத, மதவாத சக்திகளை ஒன்றுபட்டு எதிர்ப்பது என்ற பேரவையின் கீழ் டாக்டர் ராம்தாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி திராவிட முன்னேற்றக்கழகம் என்பவற்றுடன் இந்திரா காங்கிரஸ்கட்சி கூட்டணி அமைக்க முற்படலாம் என்றும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. எது எவ்வாறாயினும் இவை அனைத்தும் சேர்ந்து பட்ஜெட் கூட்டத் தொடரின் போது மறிப்பிலும், கப்பல் மறிப்பிலும் மத்திய அரசு அலுவலகங்களுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் அ.இ.அ.தி.மு.க இறங்கியிருப்பது முக்கியமான ஒன்றாகும். அத்துடன் தொலைக்காட்சி மூலமான இந்திமொழி திணிப்பு பற்றியும் அ.தி.மு.க. தலைமை திடீர் கவலை கொண்டிருக்கின்றது.

இவ்வாறாக காங்கிரஸ்கட்சி வெளியே இருந்து வரும் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய அதேவேளை உட்கட்சி நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையிலேயே உள்ளது. ஏற்கனவே காங்கிரஸ்கட்சிக்குள் இருக்கும் பூசல்கள் மற்றும் மோதல்கள் போதாது என்ற நிலையிலோ என்னவோ பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் பதவிவிலக வேண்டுமென மகாராஷ்டிரா மாநிலகாங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பிரதமர் நரசிம்மராவுக்கு போட்டியாளராக வரக்கூடியவர் என்று கருதப்படுபவர்களில் ஒருவரானசரத்பவாருக்கு எதிராக கிளப்பப்பட்டிருக்கும் இவ் எதிர்ப்பு காங்கிரஸ் பிளவின் சிகரம் எனலாம்.

இத்தகைய சூழலில்தான் நரசிம்மராவ் அரசு பட்ஜெட் கூட்டத் தொடரை எதிர்நோக்கியுள்ளது. மேகாலயா, திரிபுரா, நாகலாந்து மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி சட்டமன்றத் தேர்தல்களில் பெற்றுள்ள வெற்றி என்ற டானிக் மட்டுமே இந்தக் கூட்டத் தொடர் பற்றி நரசிம்மராவ் கொள்ளக்கூடிய ஒரே ஆறுதல் ஆகும். ஆனால் எதிர்நோக்கப்படும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க இந்த டானிக் மட்டும் போதுமா?

---

## பாரதீய ஜனதாவின் பேரணியை கைவிடக் கோரிக்கை

(டில்லி)

பாரதீய ஜனதாக்கட்சிவரும் வியாழக்கிழமை புதுடில்லியில் நடாத்த உத்தேசித்துள்ள பேரணியை கைவிடுமாறு முன்னாள் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உத்தேச பேரணியின் தன்மை கடுமையான விளைவுகளுக்கு வழிவகுக்கக் கூடியதென்று அவர்கள் நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை ஒன்றில் எச்சரித்துள்ளனர்.

எனினும் பேரணியை பாரதீய ஜனதாக்கட்சி வலியுறுத்துவதாக இருந்தால் அது கட்சித் தலைவர்கள் மட்டுமே கலந்துகொள்ளக்கூடியபேரணி ஒன்றை நடத்தலாம் எனஅவர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

மகாராஸ்டிர மாநில முன்னாள் முதல்வர் திரு. சி. சுப்பிரமணியம் இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியினர் திரு. ஈ எஸ். வெங்கட்ராமையா திரு. ரங்கநாத் மிஸ்ரா ஆகியோர் உள்ளிட்ட பிரமுகர்கள் இந்தக்கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

## அமைச்சர்களின் கார்களை பெண்கள் குழு வழிமறித்தது

மாநிலக்கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம், வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. செல்வகணபதி ஆகியோர் பயணம் செய்த கார்களைப் பெண்கள் சுற்றி வளைத்து முற்றுகையிட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் சேலம் சின்ன திருப்பதியில் நடைபெற்றது.

இவ் இரு அமைச்சர்களும் சின்ன திருப்பதியில் ஒரு சத்துணவுக்கூட நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின் திரும்பிக் கொண்டிருந்த போது அரிசி விலையைக் குறைக்கக் கோரியும், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றக்கோரியும் சுமார் 50 பெண்கள் அமைச்சர்கள் பயணம் செய்த கார்களின் முன் மறியல்செய்தனர். இன்னும்சில பெண்கள்கார்களைச் சுற்றி முற்றுகையிட்டனர்.

தங்களுக்கு கழிப்பிட வசதி இல்லை எனவும் வீட்டுமனை ப்பட்டாக்கள் வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

அதிகாரிகள் 15 நாட்களில் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதாக அப்பெண்களிடம் உறுதிஅளித்தனர். இதனைத் தொடர்ந்து பொலிசார் பெண்களை பலவந்தமாகப் புறப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

### மத்திய அரசால் தடைசெய்யப்பட்ட

# தீவிரவாத அமைப்புகளுக்கு தமிழ்நாட்டு அரசு ஆதரவு

## வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ள அமைப்புக்களை மாநில அரசு ஊக்குவிப்பதாக தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி குற்றம் சாட்டியிருக்கின்றார்.

நேற்று கோயம்புத்தூரில் இந்து முன்னணி என்ற பெயரில் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் கூட்டம் நடாத்தியதாக சென்னையில் செய்தியாளரிடம் பேசுகையில் அவர் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் போன்ற பதற்றம் ஏற்படக்கூடிய இடத்தில் கூட்டம் நடாத்த அனுமதிக்கப்பட்டது தமக்கு வியப்பளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் தமது கட்சியைப் பொறுத்தவரை இந்திரா காங்கிரஸ். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகக் கூட்டணித்தொடர்ந்து நீடிக்கின்றது என குறிப்பிட்ட அவர் அ. இ. அ. தி. மு. கழகத்தரப்பில் அதன் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாதான் இதுபற்றி தெளிவுபடுத்த வேண்டுமென்று அவர் குறிப்பிட்டுள்ளார். தடைசெய்யப்பட்ட வகுப்புவாத அமைப்புக்கள் தமிழ்நாட்டில் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தமிழக ஜனதாக் கட்சியின் தலைவர் திருமதி சந்திரலேகா குற்றம் சாட்டியிருக்கின்றார். அவர் நேற்று சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தடைசெய்யப்பட்டுள்ள டில்லிப் பேரணிக்கு தமிழ்நாட்டில் இருந்து பாரதீய ஜனதாக் கட்சித் தொண்டர்கள் செல்லாமல் மாநில அரசு தடுத்து நிறுத்த வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கின்றார்.

## மன்னாரில் தலைமறைவான சிப்பாய் மாலைதீவில் கைது

மன்னாரில் காணாமல் போன சிறிலங்கா இராணுவ சிப்பாய் ஒருவர் மாலைதீவில் கைது செய்யப்பட்டுள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார் இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவ சிப்பாய் எவ்வாறு தப்பி மாலைதீவிற்குச் சென்றார் என்பது பற்றி விசாரணைகள் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மாலைதீவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ள இராணுவச் சிப்பாயை கொழும்பிற்கு கொண்டு வரும் முயற்சியில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## கோட்ட ரீதியிலான உடற்பயிற்சிப் போட்டி

யாழ் மாவட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் கோட்ட நிலைப் போட்டிகள் இன்று ஆரம்பமாகவிருக்கின்றன.

இன்று யாழ். கோட்டத்தில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் 26 ஆம் திகதி சண்டிலிப்பாய்க் கோட்டத்தில், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி மருதனார் மடக் கோட்டத்தில். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், 5ஆம் திகதி சாவகச்சேரிக் கோட்டத்தில், மட்டுவில் மகாவித்தியாலயத்திலும், 12ஆம் திகதி வேலணைக் கோட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியிலும் நடைபெறும். இறுதி யாழ். மாவட்டப் போட்டி 17ஆம் திகதி சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் நடைபெறும்.

இப் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களோடு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் விசேட பணப்பரிசுகள் வழங்கப்படும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பெறும் அணிக்கு 2000 ரூபாவும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 1500 ரூபாவும், மூன்றாம் இடத்தைப் பெறும் அணிக்கு 1000 ரூபாவும் வழங்கப்படும்.

அத்துடன் இம் மூன்று அணிகளில் பங்குபற்றியோருக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## மாவீரர் நினைவாக அஞ்சலிக் கூட்டம்

திருக்கோணமலை ஜமாவியாக் கடலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 22 மாவீரர்கள் உட்பட மாசி மாதம் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். கேணல் பொன்னம்மான் மற்றும் அனைத்து மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் மட்டு பொன்னம்மான் வீடமைப்புத் திட்டத்தில் திருமலை இடம்பெயர்ந்த மக்களால் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இந்த நினைவஞ்சலிக் கூட்டம் வீடமைப்புத் திட்டத்தின் இடம் பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கத் தலைவர் த. முருகதாஸ் அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. தமிழீழ தேசி...

...அவர்கள் ஏற்றி வைத்தார். பின் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மாவீரர், போராளிக்குடும்ப பெற்றோர் போராளிகள் ஆகியோரால் மலர் மாலை அணிவிக்கப்பட்டது. இதன் பின் மண்மீட்புப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்காகவும், மக்களுக்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமானது. இக் கூட்டத்தில் தமிழீழ சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் சி. ரவி அண்ணன், விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணன் உட்பட பல விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். இதைத்தொடர்ந்து

## திருமலையில் விகாரைகட்ட தமிழரிடம் பணம் பறிப்பு

(திருமலை)

திருக்கோணமலையில் வெசாக் கொண்டாட்டங்களுக்காகவும், பௌத்த விகாரை கட்டவும் தமிழ் மக்களிடம் பணம் பறிப்பதில் சிறிலங்கா இராணுவம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

மேலும் தமிழர்களுக்குச் சொந்தமான உறுதிக் காணியில் ஆடை தயாரிப்பு தொழிற்சாலை நிறுவவும் சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

### ஊர்வலமாக

...டைகளைத் தாங்கியவாறு பேரணி சென்றது.

பணிமனைக்கு வந்த உத்தியோகத்தர்களை கடமைக்கு...

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட சிற்றூர்தி உரிமையாளர் அனைவருக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு நல்லூர் முத்திரைச் சந்தை சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட சகலரும் தவறாது இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## எறிகணை வீச்சு

(பொன்னாலை)

பொன்னாலை, மூளாய், சுழிபுரம் ஆகிய பகுதிகள் மீது காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரால் கோர எறிகணைத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு நடாத்தப்பட்ட இத்தாக்குதலின் போது மேற்படி பகுதிகள் மீது பல எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இதனால் மேற்படி பகுதியைச் சேர்ந்த மக்கள் பீதியடைந்த நிலையில் இரவுப் பொழுதைக் கழித்தனர். (வ)

## சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி

## உள்ளூர் மூலவளங்களில் உணவு தயாரிக்கும் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் யாழ் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து உள்ளூர் வளங்களைக் கொண்டு உணவுகள் தயாரிக்கும் போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது.

இப்போட்டி மார்ச் 7 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூர் மூலவளங்களை அடிப்படையாகக் கொண்டு உணவு தயாரிப்பதே இப்போட்டியின் நோக்கமாக அமைவதால் ஆர்வமுள்ள அனைவரையும் பங்குபற்றும்படி மகளிர் அபிவிருத்தி நிலையம் கேட்டுள்ளது.

## வல்வை பகுதி நோக்கி இரவு நேர எறிகணை வீச்சு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு இரண்டு தடவைகள் ஆட்லறி ஷெல்கள் ஏவி விடப்பட்டன.

7.30 மணியளவிலும், நள்ளிரவு 12 மணியளவிலும் ஷெல்கள் ஏவப்பட்டன. 7.30 மணியளவில் ஏவிவிடப்பட்ட மூன்று ஷெல்களில் இரண்டு ஷெல்கள் ஊறணி, வல்வெட்டித்துறை கடலிலும் மற்றொன்று வயல் வெளியிலும் விழுந்து வெடித்தன.

வல்வெட்டித்துறையில் அடுத்தடுத்து விழுந்து வெடித்த ஷெல்களில் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டதாக தகவல் இல்லை. விழுந்து வெடித்த சத்தங்கள் பல மைல்கள் தூரத்திற்கு அதிர்ந்தது.

பின்னர் நள்ளிரவு மேற்கொண்ட ஆட்லறி ஷெல்கள் சில வலிகாமம் வடக்கு-மேற்கு பகுதிகளில் விழுந்தன. எனினும் வல்வெட்டித்துறையில் இரவு நடந்த சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இதேவேளை இப்பகுதிகள் நோக்கி கடந்த மூன்று தினங்களாக ஷெல் தாக்குதலும், இப்பகுதியை குண்டு வீச்சு விமானங்கள் வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றதும் தெரிந்ததே. (யோ)

## 'மெரினால் கப்பல்' காங்கேசன் துறைமுகத்தில்

(வடமராட்சி)

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு உணவுப் பொருள்களுடன் வந்து சேர்ந்த 'மெரினால்' கப்பல் இன்னமும் அத்துறைமுகத்திலேயே தரித்து நிற்கிறது. இதேவேளை காங்கேசன் துறைமுகத்தில் உணவுப் பொருள்களை இறக்குவதாகவும் உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் தற்போது பருத்தித்துறை துறைமுகத்தில் நிற்கும் 'குமாரி' கப்பலில் இருந்து நாளையுடன் பொருள்கள் இறக்கும் வேலைகள் முடிவடைகின்றன.

'குமாரி' கப்பலில் கொழும்பில் 14 நாட்களில் ஏற்றிய பொருள்கள், பருத்தித்துறை இறங்குதுறையில் எட்டு நாட்களில் இறக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (யோ)

## தபால்களை உடன் அனுப்புக

கப்பலில் அனுப்புவதற்கு தபால்கள் நாளை பருத்தித்துறைக்கு எடுத்துச்செல்லப்பட இருப்பதனால் தபால்களை உடன் பெட்டியில் இடுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (17)

### யா. செயலகம்

...பெற்ற இப்போராட்டத்தில் மக்கள் சிறிலங்கா அரசின் மேற்படி செயலை கண்டிக்கும் பதாகைகள் மற்றும் கண்டன கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் போராட்டத்தின் இறுதியில் சுமார் 12.00 மணியளவில் மேற்படி கோரிக்கை...

## லக்திவ ஆசிரியர் கைதாகி விடுதலை

### படப்பிடிப்பாளர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

சுதந்திர பத்திரிகைகள் மீதான பிரேமதாச அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து பொரளையில் நேற்று நடைபெற்ற ஊர்வலத்தின்போது "லக்திவ" ஆசிரியர் வினி எதிரிகொடவும் புகைப்படப் பிடிப்பாளர் மகேந்திர ஜெசுந்தரவும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

மேலும் 'லக்திவ' ஆசிரியர் பொலிஸ் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்ட போதிலும் புகைப்படப் பிடிப்பாளர் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் பொலிசாரின் தாக்குதலுக்கு உள்ளானவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கோழிகளுக்கு தடுப்பூசி

(கொழும்புத்துறை)

யாழ். குருநகர் கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் இன்று காலை 9.00 மணிக்கு கால...

## ஆயருக்கு பிரிவுபசாரம்

(சுன்னாகம்)

இரஸ். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணித் தொடர்

என செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார் இராணுவ முகா

நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மாலைதீவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ள இராணுவச் சிப்பாயை கொழும்பிற்கு கொண்டு வரும் முயற்சியில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# கோட்ட ரீதியிலான உடற்பயிற்சிப் போட்டி

யாழ் மாவட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் கோட்ட நிலைப் போட்டிகள் இன்று ஆரம்பமாகவிருக்கின்றன.

இன்று யாழ். கோட்டத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி யாழ் மத்திய மகா வித்தியாலயத்திலும் 26 ஆம் திகதி பண்டத்தரிப்புக் கோட்டத்தில், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி மருதனார் மடக் கோட்டத்தில், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், 5ஆம் திகதி சாவகச்சேரிக் கோட்டத்தில், மட்டுவில் மகா வித்தியாலயத்திலும், 12ஆம் திகதி வேலணைக் கோட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியிலும் நடைபெறும். இறுதி யாழ். மாவட்டப் போட்டி 17ஆம் திகதி சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் நடைபெறும்.

இப் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களோடு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் விசேட பணப்பரிசுகள் வழங்கப்படும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பெறும் அணிக்கு 2000 ரூபாவும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 1500 ரூபாவும், மூன்றாம் இடத்தைப் பெறும் அணிக்கு 1000 ரூபாவும் வழங்கப்படும்.

அத்துடன் இம் மூன்று அணிகளில் பங்குபற்றியோருக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஊர்வலமாக

டைகளைத் தாங்கியவாறு பேரணி சென்றது.

பணிமனைக்கு வந்த உத்தியோகத்தர்களை கடமைக்கு உள்ளே விடாமல் ஆர்ப்பாட்ட பேரணியினர் மறியல் போராட்டத்தை நடாத்தினர். பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் பேரணியினரால் வழங்கப்பட்டது. நேற்று அலுவலகம் செயற்படவில்லை. (யோ)

# மாவீரர் நினைவாக அஞ்சலிக் கூட்டம்

திருக்கோணமலை ஜமாலியாக் கடலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 22 மாவீரர்கள் உட்பட மாசி மாதம் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். கேணல் பொன்னம்மான் மற்றும் அனைத்து மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் மட்டு. பொன்னம்மான் வீடமைப்புத் திட்டத்தில் திருமலை இடம்பெயர்ந்த மக்களால் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இந்த நினைவஞ்சலிக் கூட்டம் வீடமைப்புத் திட்டத்தின் இடம் பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கத் தலைவர் த. முருகதாஸ் அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் சி. ரவி அண்ணன் அவர்கள் ஏற்றி

வைக்க தீபச் சுடரை தமிழீழ விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா அவர்கள் ஏற்றி வைத்தார்.

பின் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மாவீரர், போராளிகளுடைய பெற்றோர் போராளிகள் ஆகியோரால் மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

இதன் பின் மண் மீட்புப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்காகவும், மக்களுக்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமானது.

இக் கூட்டத்தில் தமிழீழ சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் சி. ரவி அண்ணன், விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணன் உட்பட பல விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். இதைத் தொடர்ந்து பொன்னம்மான் வீடமைப்புத் திட்ட மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும், இடம்பெற்றது.

சித்தி பெற்ற

முற்பகல் 9.00 மணிக்கு யாழ் / இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும், பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்திலும், யாழ் வேலணைக் கல்விக் கோட்டத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும், வடமராட்சி கல்விக் கோட்டத்தில் 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும், தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் 26ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும் நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் கோட்ட ரீதியாக தேர்ச்சி பெற்ற மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், அதிபர்கள், பேரவை உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் பேரவைச் செயலாளர் கேட்டுள்ளார்.

## ‘மெரினால் கப்பல்’ காங்கேசன் துறைமுகத்தில்

(வடமராட்சி)

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு உணவுப் பொருள்களுடன் வந்து சேர்ந்த ‘மெரினால்’ கப்பல் இன்னமும் அத் துறைமுகத்திலேயே தரித்து நிற்கிறது. இதேவேளை காங்கேசன் துறைமுகத்தில் உணவுப் பொருள்களை இறக்குவதாகவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் தற்போது பருத்தித்துறை துறைமுகத்தில் நிற்கும் ‘குமாரி’ கப்பலில் இருந்து நாளையுடன் பொருள்கள் இறக்கும் வேலைகள் முடிவடைகின்றன.

‘குமாரி’ கப்பலில் கொழும்பில் 14 நாட்களில் ஏற்றிய பொருள்கள், பருத்தித்துறை இறங்குதுறையில் எட்டு நாட்களில் இறக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (யோ)

## திருமலையில் விகாரைகட்ட தமிழரிடம் பணம் பறிப்பு

(திருமலை)

திருக்கோணமலையில் வெசாக் கொண்டாட்டங்களுக்காகவும், பௌத்த விகாரை கட்டவும் தமிழ் மக்களிடம் பணம் பறிப்பதில் சிறிலங்கா இராணுவம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

மேலும் தமிழர்களுக்குச் சொந்தமான உறுதிக் காணியில் ஆடை தயாரிப்பு தொழிற்சாலை நிறுவவும் சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

## தபால்களை உடன் அனுப்புக

கப்பலில் அனுப்புவதற்கு தபால்கள் நாளை பருத்தித் துறைக்கு எடுத்துச்செல்லப்படவிருப்பதனால் தபால்களை உடன் பெட்டியில் இடுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (17)

யா . செயலகம்

பெற்ற இப் போராட்டத்தில் மக்கள் சிறிலங்கா அரசின் மேற்படி செயலை கண்டிக்கும் பதாகைகள் மற்றும் கண்டன கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் போராட்டத்தின் இறுதியில் சுமார் 12.00 மணியளவில் மேற்படி கோரிக்கைகள் அடங்கிய யாழ். அரச அதிபருக்கான மகஜர் ஒன்றை திசை மக்கள் நலன்காக்கும் கழக செயலாளர் வ. குணசீலன் வாசித்தார். அதனைத் தொடர்ந்து அம் மகஜரை மேற்படி கழக தலைவர் ஐயாத்துரை யாழ். பதில் அரச அதிபர் திருமதி திலகநாயகம் போலிடம் கையளித்தார். மகஜரைப் பெற்றுக் கொண்டவர் மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்றி செய்வதற்கு தம்மாலான முயற்சிகளை தாம் மேற்கொள்வதாகவும் இம் மகஜரை யாழ். அரச அதிபரிடம் தாம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து மறியல் போராட்டம் செய்த மக்கள் கலைந்து சென்றனர் (பா)

பச்சிலைப்பள்ளி

இப்பேரணி வந்தடைந்ததும் தொண்டர் நிறுவனங்களால் உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

மகஜரை ஏற்றுக்கொண்ட உதவி அரசாங்க அதிபர் அதனை உரிய இடத்திற்கு அனுப்பிவைப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து இப்பேரணி பகல் 12.10 மணியளவில் கலைந்து சென்றது.

த ஷெல்களில் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதாக தகவல் இல்லை விழுந்து வெடித்த சத்தங்கள் பல மைல்கள் தூரத்திற்கு அதிர்ந்தது.

பின்னர் நள்ளிரவு மேற்கொண்ட ஆட்லறி ஷெல்கள் சில வலிகாமம் வடக்கு-மேற்கு பகுதிகளில் விழுந்தன. எனினும் கல்வெட்டித்துறையில் இரவு நடந்த சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இதேவேளை இப்பகுதிகள் நோக்கி கடந்த மூன்று தினங்களாக ஷெல் தாக்குதலும், இப்பகுதியை குண்டு வீச்சு விமானங்கள் வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றதும் தெரிந்ததே. (யோ)

## லக்திவ ஆசிரியர் கைதாகி விடுதலை

### படப்பிடிப்பாளர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

சுதந்திர பத்திரிகைகள் மீதான பிரேமதாச அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து பொரளையில் நேற்று நடைபெற்ற ஊர்வலத்தின்போது ‘‘லக்திவ’’ ஆசிரியர் வினி எதிரிகொடவும் புகைப்படப் பிடிப்பாளர் மகேந்திர ஜெசுந்திரவும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

மேலும் ‘லக்திவ’ ஆசிரியர் பொலிஸ் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்ட போதிலும் புகைப்படப் பிடிப்பாளர் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் பொலிசாரின் தாக்குதலுக்கு உள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கோழிகளுக்கு தடுப்பூசி

(கொழும்புத்துறை)

யாழ். குருநகர் கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் இன்று காலை 9.00 மணிக்கு கால்நடை வளர்ப்போர் சங்கத்தால் நிலைய மண்டபத்தில் கோழிகளுக்கு தூக்கநோய் வராது ஊசி போடப்படும்.

இப்பகுதியைச் சூழவுள்ள மக்கள் தங்கள் கோழிகளை கொண்டுவந்து நோய்த் தடுப்பு ஊசி மருந்தை ஏற்றிச் செல்லுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## ஆயருக்கு பிரிவுபசாரம்

(சுண்டிக்குளி)

தென்னிந்திய திருச்சபையின் யாழ் மறைமாவட்ட பேராயராக 22வருடகாலமாக சேவையாற்றிய பேரருட்திரு டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் சேவையை நன்றியுடன் நினைவுகூருமுகமாக நேற்று பிரிவுபசார வைபவமொன்று உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

## காணவில்லை



அச்சுவேலி, பத்தமேனியைச் சேர்ந்த மாணிக்கர் முருகேசு (வயது 82) என்பவரைக் காணவில்லை. இவர் கடைசியாக நீல நிறச் சாரமும், வெள்ளைத் துவாயும் அணிந்து சைக்கிளில் சென்றவர். இவரை அடையாளம் கண்டவர்கள் தயவு செய்து திருமதி முருகேசு பத்தமேனி, அச்சுவேலி என்கின்ற விலாசத்திற்கு அல்லது, அண்மையிலுள்ள காவல்துறையினருக்கு அறிவிக்கவும்.

தகவல்: ஞா. ஜெயலிங்கம்

(4323)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

22-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 1-8384

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-4023, 28-6996, 26-4450, 26-8917, 27-7717, 24-5036, 43-3576, 24 1696, 24 5703, 41-9995, 42-2364, 41-2659, 24-4992, 28-1085, 26-2299

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-7419, 26-525, 41-9166, 26-3628, 26-7546, 24 6280, 26 3937, 40-1079, 26-3654, 28-8037, 40-4429, 24-129, 42-3945 42-1494, 26 6775 28-1110 43-2666, 24 9606, 28-2956 36-3438

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1993ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது